# பாட்டாளி சிந்தனை

Volume 28 No. 2

சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**SUCI (Communist)**

October 2017

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


# பணமதிப்பு நீக்கம்
# ஒரு பெரும் புரட்டு என்பது நிரூபணமானது

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2016 நவம்பர் 8ஆம் நாள் நள்ளிரவு முதல் 500, 1000 ரூபாய் நோட்டுக்கள் சட்ட ரீதியாகச் செல்லாது என அறிவித்தார். அந்நடவடிக்கையானது ஐயத்திடமின்றி “ஊழல் மற்றும் கருப்புப் பணத்தின் பிடியிலிருந்து” நாட்டை விடுவிப்பதற்கே என அவர் உறுதிபடக் கூறினார். அவ்வாறு ரூபாய் நோட்டுக்கள் தடை செய்யப்பட்டதால் வங்கிகளில் செலுத்தப்படாமல் எதிர்பாராமல் கிடைக்கவிருக்கும் லாபமானது 3 லட்சம் கோடியிலிருந்து 5 லட்சம் கோடிகள் வரையிலிருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டது. மேலும் அது சமூக நலத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்கள் போன்ற பெரிய நோக்கத்திற்காகச் செலவிடப்படும் என்றும் கூறப்பட்டது.

அத்துடன் பழைய 500, 1000 ரூபாய் நோட்டுக்களைத் தடைசெய்யும் நோக்கத்தின் பிரதான அம்சம் ஊழலை ஒழிப்பது, பயங்கரவாதத்திற்கான நிதியுதவியைத் தடுப்பது, ரொக்கமற்ற பொருளாதாரத்தை அறிமுகப்படுத்துவது மற்றும் வரிவசூல் ஆதாரத்தை விரிவுபடுத்துவது எனவும் வாதிடப்பட்டது. 15.44 லட்சம் கோடிகள் உயர்மதிப்பு ரூபாய் நோட்டுகளில் குறிப்பிடத்தக்க அளவிலான தொகை கருப்புப் பணமாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவை அரசாங்கத்தின் கடுமையான நடவடிக்கைக்குப் பயந்து வங்கி அமைப்புக்குள் வராது என்று கூறப்பட்டது.

அரசாங்கம் எதனை எதிர்பார்க்கின்றது என்பதைத் தெளிவுபடுத்திட இந்தியாவின் அட்டர்னி ஜெனரல் அவர்கள் “10லிருந்து 11 லட்சம் கோடிகளை மக்கள் வங்கியில் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கின்றோம், மீதமுள்ள 4–5 லட்சம் கோடிகள் இந்தியாவில் பிரச்சினைகளைத் தூண்டிவிட வடகிழக்கு, ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதியில் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அது தடுக்கப்பட்டுவிடும்” என 2016, நவம்பர் 23 அன்று உச்ச நீதிமன்றத்திடம் கூறினார். இது தவறு என நிரூபிக்கப்பட்டால் தன்னை “பொதுமக்கள் முன்னிலையில் தூக்கிலிடலாம்” எனவும் பிரதமர் அவர்கள் பதிவு செய்தார்.

## உண்மை நிலையை ஆராய்வோம்

நாம் உண்மை நிலையை ஆராய்வோம். எது நடைபெறும் என வாதிடப்பட்டதோ, அதற்கு மாறாக உண்மை நிலவரம் இருக்கின்றதென 2017 ஆகஸ்டு 30 அன்று வெளியிடப்பட்ட ரிசர்வ் வங்கியின் ஆண்டறிக்கை வெளிப்படுத்தியிருக்கின்றது. 15.44 லட்சம் கோடிகளில் 15.28 லட்சம் கோடியானது, அதாவது சுற்றுக்குள் வராத ரொக்கப்பணத்தில் 98.96 சதவீதம் வங்கி அமைப்பிற்குள் திரும்பவும் வந்துவிட்டது என அந்த அறிக்கை காண்பித்தது. அது மேலும், வெறும் 16,000 கோடி ரூபாய் மதிப்புள்ள பணமதிப்பு நீக்கம் செய்யப்பட்ட நோட்டுக்கள் மட்டுமே வங்கி அமைப்பிற்குள் வரவில்லை என்றது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் நேபாள குடிமக்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய நோட்டுக்களை மொத்தம் திரும்பி வந்த நோட்டுக்களின் மதிப்போடு இன்னும் கூட்டப்பட வேண்டியிருப்பதால் இதுவும்கூட ஓர் மிகையான மதிப்பீடாக இருக்கலாம். மேலும், கால வரம்பிற்குள் தங்கள் வசமுள்ள பழைய ரூபாய் நோட்டுக்களை திரும்பிச் செலுத்த முடியாத நேர்மையான மக்கள் சிலர் உள்ளனர். இதையும் கருத்தில் கொண்டு கடந்த ஜூலை மாதம் தடைசெய்யப்பட்ட நோட்டுக்களை நியாயமான காரணங்களுடன் வங்கியில் செலுத்திட விரும்பும் மக்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கிட வேண்டுமென உச்ச நீதிமன்றமும்கூட அரசாங்கத் திடம் கூறியது.

இரண்டாவதாக, 2016 நவம்பர் மாதம் 8ஆம் தேதியிலிருந்து 2016, டிசம்பர் மாதம் 30ஆம் தேதி வரையில் அரசாங்க ஏஜெண்சிகளால் எவ்வித கள்ள நோட்டுக்களும் பறிமுதல் செய்யப்படவில்லை என நிதி அமைச்சகம் பொதுத்தணிக்கைக் குழுவிடம் சமர்ப்பித்த அறிக்கையில் கூறியுள்ளது. வங்கியினுள் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையில் 0.0013 சதவீதமான ரூபாய் 42 கோடிகள் மட்டுமே கள்ள நோட்டுக்களெனக் கண்டுபிடிக்கப்பட்டதாக இப்போது ரிசர்வ் வங்கி கூறுகிறது. வங்கி அமைப்பினுள் உலவும் மொத்த கள்ள நோட்டுக்கள் 400 கோடிகள் என மதிப்பிடப்பட்டது. மேலும், கள்ள நோட்டுக்களை முற்றிலுமாக அகற்றிடுவது என்பது சாத்தியமில்லை என்பதை புதிய 500, 2000 ரூபாய் கள்ள நோட்டுக்கள் அவ்வப்போது பிடிக்கப்படுவது தெளிவாக நிரூபிக்கின்றது.

ரொக்கமற்ற பரிவர்த்தனை அல்லது இணையதளப் பரிவர்த்தனைகளை அதிகரிப்பது என்பதைப் பொருத்தமட்டில், ரொக்கப்பணம் கிடைக்கப்பெறாமல் இருந்த நவம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையில் அதிகரித்தது எனவும் ஆனால் அதன் பின்னர் அது வெகுவாகக் கீழிறங்கிவிட்டதெனவும் கூறப்பட்டது. ரொக்கமற்ற பரிவர்த்தனைக்கு மாறுதல் என முழக்கமிடப்பட்டது குறித்து, இந்தியாவில் 14.3சதவீத குடிமக்கள் மட்டுமே பணத்தை வங்கியில் வைத்திருக்கின்றனர் என்றும், அதாவது மீதமுள்ளோரிடம் ஒன்று அப்படி வங்கியில் சேமித்திடுமளவிற்கு அதிகப்படியான பணமேதுமில்லாதிருக்கின்றனர் அல்லது ரொக்கப்பரிவர்த்தனையே அவர்களுக்கு வசதியாயிருக்கின்றது என்பதுதான் யதார்த்த உண்மையாக இருக்கின்றது என 01.01.2017 தேதியிட்ட எமது ஆங்கில ஏடான புரொலிடேரியன் எராவில் வெளிவந்த கட்டுரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

## வடகொரியா மீதான போர் அச்சுறுத்தல்

# யுஎஸ் ஏகாதிபத்தியத்தின்
# நயவஞ்சகத் திட்டத்தை முறியடிப்போம்

பல ஆண்டுகளாக வடகொரியா என்றழைக்கப்படும் கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு (Democratic People Republic of Korea - டிபிஆர்கே) மீது அடுத்தடுத்து பொருளாதாரத் தடைகள் விதித்தும், இந்த சிறிய நாட்டை தொடர்ந்து ராணுவ ரீதியில் சுற்றி வளைத்தும் அடிபணிய வைக்க யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் முயற்சித்து வருகின்றனர்.

நீண்ட காலமாகவே கொரிய தீபகற்பத்தில் ஏராளமான படைகளையும் ராணுவத் தளவாடங்களையும் குவித்து யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள் போர்ப்பதற்றத்தை அதிகரித்து வருகின்றனர். தற்போதைய நிலவரப்படி 30,000 யுஎஸ் துருப்புக்கள் தென்கொரியாவிலும் 50,000 துருப்புக்கள் ஜப்பானிலும் குவிக்கப்பட்டுள்ளன. அணு ஆயுதங்கள் தாங்கிய மிகப்பெரிய யுஎஸ் போர்க் கப்பல்கள் தென் சீனக் கடலில் ரோந்து சுற்றி வருகின்றன. அணு ஆயுதம் தாங்கிச் செல்லக்கூடிய யுஎஸ்ஸின் பி–1பி சூப்பர் சோனிக் குண்டுவீச்சு விமானங்கள் கொரியத் தீபகற்பத்தில் தொடர்ந்து சுற்றிப்பறந்து வருகின்றன.

சந்தர்ப்பம் வாய்க்கும் போது இந்த மிகச்சிறிய நாட்டின் மீது முழு அளவிலான ராணுவத் தாக்குதல் நடத்தி தனக்கு அடிபணிய வைத்திட வேண்டும் என்பதே ஏகாதிபத்திய யுஎஸ் போர்வெறியர்களின் முழுத் திட்டமாக இருக்கிறது. ஆனால் ஈராக் அல்லது லிபியாவைப் போன்று அல்லாது வடகொரியா அடிபணிய மறுத்ததுடன் அது தனது தற்காப்புக்காக தொடர்ந்து அணுகுண்டுகள், ஏவுகணைகள் போன்ற ராணுவ பலத்தை வளர்த்துகொள்வதை கைவிடவில்லை. இதனால் யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளின் சதி வெற்றியடைய முடியவில்லை. ஒட்டுமொத்த உலகையும் தங்களது கொள்ளைக்காடாகவும் வேட்டைக்காடாகவும் ஆக்கவேண்டும் என்ற யுஎஸ் ஏகாதிபத்தியவாதி களின் வல்லாதிக்கத் திட்டத்திற்கு வடகொரியா தடையாக இருக்கின்றது.

சமீபத்தில், கண்டம் விட்டு கண்டம் பாயும் நீண்டதூர ஏவுகணை சோதனையையும் சக்திவாய்ந்த அணுகுண்டு சோதனையையும் வட கொரியா வெற்றிகரமாகத் தொடர்ச்சியாக நடத்தியுள்ளது. அதனால், அதிபர் டொனால்டு டிரம்ப் தலைமையிலான யுஎஸ் ஏகாதிபத்தியம் வடகொரியாவுக்கு எதிராக வார்த்தையாலும் நடவடிக்கையாலும் பகைப் பிரச்சாரத்தை அதிகப்படுத்தியது. வடகொரியா ‘போரை வரவழைத்துக்கொள்கிறது’, ‘அமைதிக்கு அச்சுறுத்தலாக உள்ளது’ போன்ற குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ள பெண்டகன் ஆட்சியாளர்களும் அவர்களது ஐக்கிய நாடுகளின் (ஐக்கிய நாடுகள்–ஐ நா) சபைக் கூட்டாளிகளும் இந்த சிறிய சோசலிச நாட்டின் மீது கொடுமையான தடைகளை விதித்துள்ளனர். இதன் மூலம் கிட்டத்தட்ட ஒரு மறைமுகப் போரையே தொடுத்துள்ளனர்.

தங்களுக்கு கட்டுப்படாவிட்டால், நவீன அணு ஆயுதங்கள் குவிப்பதை நிறுத்தாவிட்டால் ‘இதுவரை

தொடர்ச்சி 2ம் பக்கம்

வடகொரியா

# வடகொரியாவை நிர்மூலமாக்கிடுவோம் என ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்க அதிபர் மிரட்டல்

1ம் பக்கத் தொடர்ச்சி

உலகம் கண்டிராத பேரழிவைச் சந்திக்க வேண்டியிருக்கும்' என்று வடகொரியாவை அவர்கள் எச்சரிக்கின்றனர். சில நாட்களுக்கு முன்பு ஐநா சபையில் முதன்முதலாகப் பேசிய யுஎஸ் அதிபர் டிரம்ப் "வடகொரியாவை நாங்கள் அழிப்போம்" என்று கூறினார். வடகொரியா ஒரு அடங்காத நாடு எனவே அதற்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று வெளிப்படையாகவே ஒட்டுமொத்த பூர்ஷ்வா ஊடகங்களும் தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்யத் தூண்டப்பட்டு வருகின்றன.

தனது மக்களின் விருப்பத்திற்கு மாறாகவும் அவர்களைப் பட்டினி போட்டும் வடகொரியா தனது ராணுவபலத்தைப் பெருக்கிவருவதாகவும் பொய்ப் பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. வடகொரிய அரசாங்கம் மனித உரிமை மீறலில் ஈடுபடுகிறது என்றும் வடகொரிய அதிபரின் பெயருக்குக் களங்கம் விளைவிப்பதற்காக கட்டுக் கதைகளும் இந்தத் திட்டமிட்ட விஷமப்பிரச்சாரத்தில் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன.

சர்வதேச அமைதியைப் பேணிக்காக்கவும் சம உரிமை, மக்களின் சுய நிர்ணய கோட்பாடுகளின் அடிப்படையில் நாடுகளிடையே நட்புறவைப் பேணவும் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பாத்திரம் மிகவும் கண்டிக்கத்தக்கதாக உள்ளது. தான் பிரகடனப்படுத்திய அனைத்து நோக்கங்களையும் மறுதலித்துவிட்ட ஐநா சபை நீண்டகாலமாகவே அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது கூட்டாளிகளும் உலகம் முழுவதும் மேற்கொண்ட கொள்ளை, போர், மற்ற நாடுகளின் தன்னாட்சியில் அத்துமீறுவது, பிற நாடுகளை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பது மற்றும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை கண்டுகொள்ளாமல் அதற்கு ரப்பர் ஸ்டாம்பாக செயல்பட்டுவருகிறது. அதே நடைமுறையைப் பின்பற்றி அது அமெரிக்க ஏகாதிபத்தியம் வடகொரியாவிற்கு எதிராக மூர்க்கத்தனமான முறையில் அதிகரித்துவரும் அத்துமீறலுக்கு ஒப்புதல் அளித்து நீதியெனும் முத்திரையைக் கொடுத்து வருகின்றது.

எதிர்ப்புரட்சிக்குப் பின்னர் தற்போது முதலாளித்துவ நாடுகளாகிவிட்ட ரஷ்யாவும் சீனாவும் கூட அணு ஆயுத பலத்தைப் பெருக்கும் வடகொரியாவை கண்டிக்கும் கூட்டத்தோடு இணைந்துள்ளன. அதன் மூலம் சோசலிச நாட்டின் மீதான பெண்டகனின் போர் அச்சுறுத்தலுக்கும் பொருளாதாரத் தடைகளுக்கும் மறைமுகமாக ஆதரவு தருக்கின்றன. கொஞ்சம் எதிர்ப்பு தெரிவிப்பதும் கூட சோசலிச அண்டை நாட்டை ஆதரிக்க வேண்டும் என்ற தோழமை ஒத்துழைப்பால் அல்லாமல் சந்தையிலும் அரசியலிலும் தங்களது தாக்கத்தை விரிவுபடுத்திட அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனான தங்களது முரண்பாட்டைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தான் எதிர்க்கின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்திய முதலைகளின் கோரப் பிடியில் உள்ள இந்த ஒருதுருவ உலகிலிருந்து தனது தாய்நாட்டையும் சோசலிசத்தையும் பாதுகாப்பதற்கு அமெரிக்க போர் எந்திரத்தை எதிர்கொள்வதற்கு ராணுவ பலத்தைக் கூட்டிக் கொள்வதைத் தவிர வடகொரியாவிற்கு வேறு என்ன வழி இருக்கிறது?

## போர் – அமைதி – உண்மை நிலை

இங்கு முதலில் எழக்கூடிய கேள்வி என்னவென்றால், போர்–அமைதியைப் பொருத்தமட்டில் சோசலிச வடகொரியாவின் வரலாறும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வரலாறும் எப்படிப்பட்டது?

எந்த காரணத்தைக் கூறியாவது இதுவரை எந்த ஒரு நாட்டையாவது வடகொரியா தாக்கியுள்ளதா? பொய்யான காரணத்தைக் கூறி எந்த நாட்டிலாவது ஊடுருவியுள்ளதா, இறையாண்மையை தகர்த்துள்ளதா? அது அணு மற்றும் ரசாயன ஆயுதங்களை எந்த நாட்டின் மீதாவது பயன்படுத்தியுள்ளதா, லட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றுள்ளதா?

உலகின் எந்தப் பகுதியிலாவது டிபிஆர்கே தனது ராணுவத் தளத்தை அமைத்துள்ளதாகவோ அல்லது மற்ற நாடுகளைத் தாக்குவதற்காக இன்னொரு நாட்டில் தனது ராணுவத்தை குவித்ததாகவோ ஏதாவது முன்னுதாரணம் உள்ளதா? மற்ற நாடுகளின் கடல் பகுதியில் அணு ஆயுதங்களோடு கூடிய கடற்படையை ரோந்துக்காக அனுப்பியுள்ளதா, தனது உத்தரவுக்குப் பணியவில்லை என்பதற்காக எந்த ஒரு இறையாண்மையுடைய நாட்டின் வானில் அத்துமீறி பறந்துள்ளதா, ஆளில்லா விமானங்கள் மூலமாக மற்ற நாடுகளின் விண்ணிலிருந்து தாக்குதல்களை நடத்தியுள்ளதா, ஆயுதபலத்தைக் கொண்டு, விமான மோதல், அணு ஆயுதங்களைக் கொண்டு மிரட்டியுள்ளதா?

மற்ற நாடுகளின் ஒருமைப்பாட்டையும் சுதந்திரத்தையும் நசுக்கியுள்ளதா? எந்தவொரு நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரையாவது கடத்தியுள்ளதா, கொன்றுள்ளதா அல்லது தனது ராணுவ ஊடுருவல் மூலமோ அல்லது தனது உளவுத்துறை மூலமாகவோ ஐந்தாம் படை மூலமாகவோ உள்நாட்டுக் கலவரங்களைத் தூண்டிவிட்டு திட்டமிட்ட ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்டுள்ளதா? மற்ற நாடுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு ஊறுவிளைவிக்கவோ கவிழ்க்கவோ திட்டமிட்ட கிளர்ச்சிகளை உருவாக்கியுள்ளதா? "தனது நலனுக்கு எதிராக உள்ளது" என்று குற்றம் சாட்டி எந்தவொரு நாட்டின்மீதாவது பொருளாதார–ராணுவத் தாக்குதல் ஏதாவது தொடுத்துள்ளதா? இந்த அனைத்துக் கேள்விகளுக்குமே பதில், இல்லை என்பதுதானே!

இதற்கு நேர்மாறாக, மேற்சொன்ன அனைத்து அக்கிரமமான நாசகாரக் குற்றங்களையும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் செய்துள்ளனர். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அவர்கள் 70 போர்களை நடத்தியுள்ளனர், 'பாதிக்கப்பட்ட' 34 நாடுகளில் 2 கோடி மக்களைக் கொன்றுகுவித்துள்ளனர்.

அந்நிய மண்ணில் அணு குண்டு வீசி நொடிப் பொழுதில் 2 லட்சம் அப்பாவி மக்களைக் கொன்றதோடு தலைமுறை தலைமுறையாக கதிரியக்கத்தால் உண்டாகும் நோய்களால் மக்களைப் பாதிப்படையச் செய்துள்ள ஒரே நாடு அமெரிக்காதான். 1950களில் நடந்த கொரியப் போரிலும், பின்னர் 1960களிலும் 1970களிலும் நடைபெற்ற வியட்நாமுடனான போரிலும், அதன் பின்னர் சமீபத்தில் சிரியாவிலும் ஈராக்கிலும் கொத்துக் கொத்தாகக் கொல்லும் ஆயுதங்களை அமெரிக்க ஆட்சியாளர்கள் பயன்படுத்தினர் என்று ஆதாரங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டு உள்ளது.

உலகம் முழுவதிலும் 70 நாடுகளுக்கும் மேற்பட்ட இடங்களில் 800 ராணுவ முகாம்களை நிறுவியுள்ள அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தும் தூரத்தில் ஒவ்வொரு நாட்டையும் வைத்துள்ளது. தென்கொரியாவில் 38 ராணுவத் தளங்களை யுஎஸ் வைத்துள்ளது. 150க்கும் மேலான நாடுகளில் அதிநவீன ஆயுதங்களோடு அமெரிக்க ராணுவம் முகாமிட்டுள்ளது. கிட்டத்தட்ட 3 லட்சம் அமெரிக்க ராணுவ வீரர்கள் அங்கே நிறுத்தப்பட்டுள்ளனர்.

"நட்பு நாடு என்று நிரூபிக்காதவரை, எந்த ஒரு நாடும் தனக்கு எதிரிதான்" என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பிரகடனப்படுத்தியுள்ளனர். அதாவது தனது பொருளாதார–அரசியல்–ராணுவ நலன்களுக்கு அடிபணிந்து சேவை செய்யாவிட்டால் அந்த நாட்டைத் தனது எதிரி நாடு என்று கூறுகின்றனர். உள்நாட்டுக் கலவரங்களை உருவாக்குதல், போர் வெறித் தாக்குதல்கள், ஆயுத மிரட்டல்கள் ராணுவ ஊடுருவல்களை வெளிநாடுகளில் நிகழ்த்துவதில் பெண்டகன் ஆட்சியாளர்கள் முன்னிலை வகிக்கிறார்கள்.

அப்பாவி மக்களைக் கொத்துக்கொத்தாகக் கொன்றுகுவிப்பது, அந்நிய மண்ணில் குண்டுகளை வீசித் தரைமட்டமாக்குவது, மிரட்டுவது, நாசவேலையில் ஈடுபடுவது, ரகசியக் கொலைகள், ராணுவக் கிளர்ச்சிகள், மற்றநாடுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை கடத்துதல், சிஐஏ மற்றும் ராணுவ உளவு நிறுவனங்கள் மூலமாக "ஜனநாயகத்தை ஏற்றுமதி செய்கிறோம்" நாகரீகமற்றவர்களை நாகரீகமாக்குகிறோம் என்ற பெயரில் பெரிய அளவிலான உளவு வேலையில் ஈடுபடுவது போன்ற கெட்ட பெயருக்கு சொந்தக்காரனாக அமெரிக்கா விளங்குகிறது. அமெரிக்காவின் இதுபோன்ற கொடிய செயல்கள், குற்றங்களின் பட்டியல் நீளமானது, அதற்கு இந்த இடம் போதாது.

இதை வைத்துப் பார்க்கையில், யார் போர் வெறியர்? யார் அமைதிக்கு அச்சுறுத்தல்? தனது ராணுவ பலத்தால் அனைவரையும் தனது காலடியில் விழவைக்க வேண்டும் என்று திட்டமிட்டு அடக்குமுறை எண்ணத்தோடு செயல்படுவது யார்? ஒட்டுமொத்த உலகையும் மிரட்டிக் கொண்டிருப்பது யார்? மிகச்சிறிய சோசலிச வடகொரியாவா அல்லது ஏகாதிபத்தியத் தலைவனான அமெரிக்காவா?

தனது சொந்த நாட்டிலிருந்து பல்லாயிரக் கணக்கான மைல்கள் தொலைவில் அந்நிய நாடுகளுக்கு சென்று தனது ராணுவத்தைக் குவித்து வைத்துக்கொண்டு குறிவைத்துள்ள நாட்டை துப்பாக்கி முனையில் பணியவைக்க முயற்சிப்பது யார்? வடகொரியாவா அல்லது அமெரிக்காவா?

இந்த உண்மைகளோடு சேர்ந்து 1950–53இல் நான்கு ஆண்டுகள் நடைபெற்ற கொரிய யுத்தத்தை தொடங்கி அந்நாட்டைப் பிளவுபடுத்தியதில் அமெரிக்காவின் நாசகரப் பங்கினை நாம் மீண்டும் நினைவுபடுத்துவோம்.

## கொரியப் போரின் வரலாற்றுப் பின்னணி

இரண்டாம் உலகப்போரில் சோவியத் யூனியனின் தீரமிக்க செஞ்சேனையின் கைகளில் சிக்கி ஜெர்மனி–இத்தாலி–ஜப்பான் அச்சு நாடுகளின் பாசிசக் கூட்டணி படுதோல்வி அடைந்தபின்பு சோசலிசத்தின் மீதான நம்பகத்தன்மை அதிகரித்து கம்யூனிச சித்தாந்தம் வேகமாக உலகம் முழுவதும் பரவி உலகின் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் அனைவரும் அடிமைச் சங்கிலியை உடைத்தெறிய வேண்டும் என்ற உத்வேகத்தை ஏற்படுத்தியது.

ஒட்டுமொத்த கிழக்கு ஐரோப்பாவும் சோசலிச நாடுகளான நிலையில் சீனப் புரட்சி வெற்றியடையும் தருவாயில் இருந்தது. ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காவிலுள்ள காலனிகள், அரைக்காலனி நாடுகளில் ஏகாதிபத்திய–எதிர்ப்பு, காலனி–எதிர்ப்புப் போராட்டங்கள் பிரமிக்கத்தக்க உத்வேகம் பெற்றன, மாபெரும் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் ரஷ்யா தலைமையிலான சோசலிச முகாம் நம்பத்தகுந்த கூட்டாளியாகவும் உத்வேகமூட்டும் ஆதாரமாகவும் பார்க்கப்பட்டது. அதோடு மூன்றில் ஒரு பங்கு நாடுகள் சோசலிச நாடுகளாயின, உலக முதலாளித்துவ சந்தை குறிப்பிடத்தக்க அளவு சுருங்கியது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய இத்தகைய நிகழ்வுகள் ஏகாதிபத்தியவாதிகள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது. ஐரோப்பாவின் மிகப்பெரிய ஏகாதிபத்திய சக்திகள் யாவும் போரால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் கிட்டத்தட்ட எந்தப் பாதிப்பையும் அடையவில்லை. அமெரிக்காவின் பிரதான நிலப்பரப்பு எதுவுமே குண்டு வீச்சையோ அல்லது ராணுவ ரீதியிலான பாதிப்பினையோ சந்திக்கவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம் இதை சாதகமாக வைத்துக்கொண்டு தனது பொருளாதார மற்றும் நிதிபலத்தைப் பயன்படுத்தி உலகின்மீது தனது ஆதிக்கத்தை செலுத்தவேண்டும் என்ற ஆசையை

தொடர்ச்சி 4ம் பக்கம்

# உலகில் முதல் சோசலிச அரசை ரஷ்யாவில் உருவாக்கிய நவம்பர் புரட்சியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட நடைபெற்ற பொது நிகழ்ச்சிகள்

“மனுசனை மனுசன் சாப்பிடும் காலம் மாறுவதெப்போ, தேறுவதெப்போ” என நாம் ஏங்கிக்கொண்டிருந்த காலத்தில், மாற்றிக் காட்டி விட்டோம் என்று ரஷ்யப் பாட்டாளிகள் உலகத்திற்கு அறிவித்த நாள் நவம்பர் 7, 1917. பழைய காலண்டர் முறைப்படி அக்டோபர் 25ல் நடந்ததால் இதனை அக்டோபர் புரட்சி என்றும் அழைப்பர். “வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும். இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்; பயிற்றுப் பல கல்வி தந்து இப் பாரை உயர்த்திடல் வேண்டும்” என்று கோரினார் மகாகவி பாரதி. அவ்வத் துணையையும் முதல் ஐந்தாண்டுகளிலேயே சாதித்துக்கட்டினர் ரஷ்யப் பாட்டாளிகள். காரணம், அங்கு தொழிற்சாலைகளும் விளை நிலங்களும் பொதுவுடைமையாகிவிட்டன. சோசலிசப் புரட்சிக்குப் பின் பல்வேறு தேசிய யினங்கள் சோவியத் கூட்டமைப்பு நாடுகளாக ஒன்று சேர்ந்து, “யூனியன் ஆஃப் சோவியத் சோசலிஸ்ட் ரிபப்ளிக் (யுஎஸ்எஸ்ஆர்)” என உருவானது. மாபெரும் லெனின் தலைமையில் நடந்தப் இப்புரட்சியைப் பற்றியும், ஸ்டாலின் தலைமையில் அது எவ்வாறு கட்டமைக்கப்பட்டு மிகப் பெரிய வலிமை பொருந்திய நாடாக வளர்ந்தது என்ற வரலாற்றையும் இத்தகைய புரட்சியின் தேவை இந்தியா உட்பட உலக உழைக்கும் மக்கள் அனைவருக்கும் இன்றும் இருப்பதை எடுத்துக் காட்டவும் எமது கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) நாடெங்கிலும் 7 நவம்பர் 2016–17 நவம்பர் 2017 வருடம் முழுவதும் பல நிகழ்ச்சிகளை நடத்துகின்றது. தமிழகத்தின் தலைநகர் சென்னையில் பல இடங்களில் புகைப்படக் கண்காட்சியும் பொதுக்கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

கம்யூனிசம் என்ற மாபெரும் விஞ்ஞானத் தத்துவத்தின் மேன்மையை, திருத்தல்வாதக் கட்சிகளின், அதன் தலைவர்களின் நடத்தையால் இன்றைய சமுதாயத்தினர் அறியாமல் இருக்கின்றனர். முதலாளித்துவ அறிவுஜீவிகள் அதனை இன்றைய காலத்திற்கு ஒவ்வாத தத்துவம் என்று விடாமல் பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் 20ஆம் நூற்றாண்டின் மாபெரும் புரட்சியாகவும் உழைக்கும் மனிதனின் கனவை மட்டுமல்லாது முற்போக்கு சிந்தனையாளர்கள் இவ்வுலகம் எப்படி இருக்க வேண்டும் என நினைத்தார்களோ அப்படியாக சோவியத் ரஷ்யா மாறிவருகிறதென்றும் புகழ்ந்தவர்கள் ஏராளம். சாமானிய மக்கள் மட்டுமல்ல, உலகமுழுவதும் பல சான்றோர்களும் விஞ்ஞானிகளும் கவிஞர்களும் சோசலிச ரஷ்யாவை மிகவும் பாராட்டியிருக்கின்றனர். ஏன், தமிழகத்தில் எடுத்துக் கொண்டால்கூட, இந்தியாவிலேயே ரஷ்யாவில் நடைபெற்ற சோசலிசப் புரட்சியை யுகப் புரட்சி என முதலில் வரவேற்றுப் பாடியவர் மகாகவி பாரதியன்றோ.

சாதிக் கொடுமை ஒழியவேண்டும், பெண்களுக்கு விடுதலை வேண்டும் என வாழ்நாள் முழுக்கப் பாடுபட்ட தந்தை பெரியார், ரஷ்யாவில் அதுபோன்ற கொடுமைகள் இல்லை, அதற்குக் காரணமான மதம் சார்ந்த மூடப் பழக்கங்களும் இல்லை என்பதை குடியரசு பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வந்தார். “பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஐக்கிய தேசம் (UK) முதலியனவெல்லாம் குடியரசு நாடுகளாகவே இருக்கின்றன. ஆனால் எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித் தாடுகிறது. ரஷ்யா ஒன்றில்மட்டும் வேலையில்லாத் திண்டாட்டமே கிடையாது. ...உண்மையில் அது ஒரு புதிய உலகம். அதுபோல் முன்னொருபோதும், எந்நாட்டிலும் சீர்திருத்தம் நடந்தேறியதேயில்லை. அங்கு எல்லா மனிதர்களும் சமமாகவே கருதப் படுகின்றனர். மக்களுக்குள் உயர்வு தாழ்வு என்பதே கிடையாது” என புகழ்கிறார் தந்தை பெரியார்.

“கம்யூனிச நாட்டில் அடக்குமுறைதான் இருக்கும்” என்றொரு கருத்தை மக்களிடம் முதலாளித்துவவாதிகள் ஊடகங்கள் வாயிலாக ஏற்படுத்திவிட்டனர். ஆனால் நேரில் சென்று பார்த்த கலைவாணர் என் எஸ் கிருஷ்ணன், “மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் ஆட்சி எங்கு என்றால் ரஷ்யாவிலேதான். அதை நாங்கள்

தொடர்ச்சி 11ம் பக்கம்

## சென்னையில் நடைபெற்ற மாபெரும் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா பொது நிகழ்ச்சிகள்



தோழர் செபாஸ்டியன், வியாசர்பாடி கூட்டத்தில் உரையாற்றுகிறார்



தோழர் பாலாஜி பாபு, அம்பத்தூர் கூட்டத்தில் உரையாற்றுகிறார்



புகைப்படக் கண்காட்சி மற்றும் புத்தக விற்பனை




மாபெரும் நவம்பர் புரட்சியை வாழ்த்தி தோழர்கள் கோஷமிடுகின்றனர்



மாபெரும் நவம்பர் புரட்சி கூட்டத்தில் பங்கேற்றோர்



தோழர் சிவகுமார், மூலக்கொத்தளம் கூட்டத்தில் உரையாற்றுகிறார்



தோழர் திலகர், ஓட்டேரி கூட்டத்தில் உரையாற்றுகிறார்




தோழர் சடையாண்டி, கொருக்குப்பேட்டை கூட்டத்தில் உரையாற்றுகிறார்

வடகொரியா

# தம்மை பாதுகாத்துக் கொள்ளும் மறுக்க முடியாத உரிமை அனைத்து நாடுகளுக்கும் உள்ளது

2ம் பக்கத் தொடர்ச்சி

வளர்த்துக்கொண்டது. அது ஏகாதிபத்திய–முதலாளித்துவ முகாமின் தலைவனாக பின்னர் உருவெடுத்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, போரால் பாதிக்கப்பட்ட பல சிறிய நாடுகள் மறுபுனரமைப்பிற்காக தங்களுக்கு உதவுமாறு அமெரிக்காவிடம் கெஞ்சின. அந்த நாடுகளுக்கும் நிதிமூலத்தனத்தை ஏற்றுமதி செய்வதன் மூலமும் அங்கே தனது பொம்மை அரசாங்கங்களை நிறுவுவதன் மூலமும் உதவி செய்கிறேன் என்றபெயரில் இந்த சிறிய நாடுகளை நவீன–காலனி ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர (அதாவது தனது நேரடி காலனிகளாக ஆக்காமல்) இதை ஒரு வாய்ப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியம் பார்த்தது, பயன்படுத்திக்கொண்டது.

அதே சமயம் சோசலிசத்திற்கு எதிரான தனது போரையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடர்ந்தது. சோசலிச அரசுகளை "எதேச்சதிகார அரசுகள்" என்று முத்திரை குத்தியது, அமெரிக்காவை 'சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனிதாபிமானத்தின் பாதுகாவலனாகவும்' 'அமைதியின் சின்னமாகவும்' பரப்பியது.

"சர்வதேச கம்யூனிசத்தின் அச்சுறுத்தலை"த் தடுக்கிறோம் என்ற பெயரில் எல்லா வழிகளிலும் சோசலிசநாடுகளை சுற்றிவளைக்கும் 'முற்றுகையிடும் கொள்கையைப்' பின்பற்றினர். சோசலிசம், தேசிய விடுதலைக்கான சக்திகள் வளர்வதைத் தடுப்பதிலும் விடுதலைக்கான மக்கள் விடுதலைப் போராட்டங்களுக்கு இடையூறு செய்வதற்கும், சிறுமைப்படுத்துவதற்கும் வாய்ப்புள்ள இடங்களில் அழிப்பதற்கும் தேவையான எல்லா வேலைகளையும் செய்தனர்.

### கொரியப் போரும் – நாட்டு பிரிவினையும்

சோவியத் யூனியனையும் சீனாவையும் எல்லையாகக் கொண்டிருந்த கொரிய நாடு ஜப்பானின் காலனியாக இருந்தது. 1945ல் பாசிச அச்சுக் கூட்டணிக்கு செஞ்சேனை மரண அடி கொடுத்ததால் சரணடைந்த ஜப்பான் கொரியாவிலிருந்து வெளியேறியது. இதனால் மகிழ்ச்சியடைந்த கொரிய மக்கள் சோசலிசத்தைத் தழுவவும் முன்னேற்றமடையவும் தயாராயினர். ஜப்பானின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக சீனக் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து கொரிய கம்யூனிஸ்டுகள் 1930களிலும் 40களிலும் போராடினர். சீன கம்யூனிஸ்ட் கட்சியில் ஒருகாலத்தில் உறுப்பினராக இருந்தவர் வடகொரியாவின் முதல் அதிபர் கிம்–இல்–சுங் ஆவார். அவர் கொரிய மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பிற்குரிய தலைவராக உருவெடுத்தார்.

இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சோசலிசத்தின் மீதான ஈர்ப்பு அதிகரித்துவந்ததால் ஏற்கனவே விரக்தியிலிருந்த அவர்கள் ஒன்றுபட்ட சோசலிச கொரியா இருந்தால் அது வட–கிழக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த ஆசியாவிலும் தனக்கான கதவு மூடப்பட்டுவிடும் என்று அமெரிக்க ஏகாதிபத்தியம் உணர்ந்தது. எனவே "38 டிகிரி அட்சரேகையின் தெற்கிலிருந்து ஜப்பானியப் படைகளை விரட்டுகின்றோம்" என்ற பெயரில் பசிபிக் பிரிவில் குவிக்கப்பட்டிருந்த தனது ராணுவத்தை கொரியாவின் தெற்குப்பகுதியின் பெரும் பகுதியை ஆக்கிரமிக்கச் செய்தனர்.

நவம்பர் 22, 1943இல் நடைபெற்ற கெய்ரோ மாநாட்டில் 'கொரியா சுதந்திரமான தற்சார்பு நாடாகிவிடும்' என்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னரும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தங்களது ஏகாதிபத்திய நோக்கத்தை விடவில்லை. அத்துடன், 38 டிகிரி அட்சரேகை என்ற கற்பனையான வரைகோட்டைத் தன்னிச்சையாகக் குறிப்பிட்டு கொரியாவை இரண்டாகப் பிரித்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பக்கபலத்தோடு 1948 மே மாதத்தில் தென்கொரியா தனிநாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டது, அமெரிக்காவின் அடிவருடி ஆட்சியாக ஷிங்மான் ரீ தலைமையிலான ஆட்சி அமைக்கப்பட்டது. அதன் பின்னர் செப்டம்பர் 1948இல் ஜனநாயக கொரிய மக்கள் குடியரசு (டிபிஆர்கே) வடக்கில் ஒரு சோசலிச அரசாக உருவானது. ஜப்பான் சரணடைந்த பின்னர் இவ்வாறாகத்தான் பெண்டகன் ஆட்சியாளர்களின் ஏகாதிபத்திய எந்திரத்தால் கொரியா இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

ஒன்றுபட்ட வலுவான சோசலிச கொரியாவாக வாழவேண்டும் என்ற கொரிய மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்தான் தடுத்தனர். தங்களது மண்ணில் எத்தகைய சோசலிச அமைப்பை அல்லது அரசமைப்பு முறையை என்பதைத் தேர்வு செய்துகொள்ளும் அம்மக்களின் அடிப்படை உரிமையை அமெரிக்கா காலிலிட்டு மிதித்தது.

ஆனால் அத்துடன் நிற்கவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தங்களது ஏகாதிபத்திய திட்டமான விரிவுவாதக் கொள்கைக்காக வடகொரியாவை எந்த நேரமும் தாக்குவதற்கு ஏதுவாக தென்கொரியாவை தனது ராணுவ மையமாகப் பயன்படுத்தி அங்கு தங்களது போர்த் தளவாடங்களைக் குவித்தனர். தென்கொரியாவைப் பகடைக்காயாக வைத்து 1949ல் கொரியத் தீபகற்பத்தில் ஒரு முழு அளவிலான போருக்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆயத்தமாயினர்.

வடகொரியாவை அழித்து கொரிய தீபகற்பம் முழுவதும் தங்களது ஆதிக்கத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற தங்களது கெடுநோக்கத்திற்கு குறுக்கே வந்தால் தாக்குவோம் என்று புதிதாக உருவெடுத்த சோசலிச சீனாவை அச்சுறுத்துவதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் 1949ல் ஆகஸ்ட் முதல் அக்டோபர் மாதங்களில் சீன பகுதியில் வான்வெளித் தாக்குதல்களை அடிக்கடி நடத்தியதோடு தனது 7வது கடற்படையை தைவான்கடற்பகுதிக்குள் நகர்த்தியது. இவ்வாறாக அப்பிராந்தியத்தில் போரைத் தூண்டும் நடவடிக்கையை அமெரிக்கா செய்தது.

10 ஜனவரி 1950இல் அன்றைய அமெரிக்க அதிபர் ட்ரூமென் வெளிப்படையாகத் தெரிவித்ததாவது: உலகின் தலைமைப் பொறுப்பை நாமே எடுத்துக்கொள்வதற்கு நமக்கு இரண்டு மிகப்பெரிய போர்களும் 30 ஆண்டுகளும் தேவைப்பட்டது. "இன்று இந்த ஆதிக்க நிலையைத் தொடர வேண்டும்".

இறுதியாக "கம்யூனிச தாக்குதலிலிருந்து" தென்கொரியாவைப் "பாதுகாக்கிறோம்" என்ற பெயரில் டிபிஆர்கே (வட கொரியா) மீது முழு அளவிலான ராணுவத் தாக்குதலை அமெரிக்கா தொடுத்தது. 5.7 லட்சத்திற்கும் அதிகமான அமெரிக்கத் துருப்புகள் போருக்காக கொரியாவுக்கு அனுப்பப்பட்டன. கொரிய மக்களை பீதியடையச் செய்து கொரியாவைச் சாம்பலாக்கி கொரிய மக்களை அடித்து நொறுக்கி சின்னாபின்னமாக்கி தங்கள் காலடியில் மண்டியிடச்செய்யவேண்டும் என்பதே அமெரிக்க போர்வெறியர்களின் நோக்கமாக இருந்தது.

கண்மூடித்தனமான குண்டுவீச்சு மூலம் தொழிற்சாலைகள், பள்ளிகள், மருத்துவமனைகள், வீடுகளை அழித்தனர். சில மாதங்களிலேயே அதன் 20% மக்கள் அழியும் அளவிற்கு கொடுந்தாக்குதலை அமெரிக்கா நடத்தியது. சர்வதேச நாடுகளின் விதிகளின் படி கடுமையாகத் தடைசெய்யப்பட்ட பாக்டீரியா மற்றும் ரசாயன நாசகார ஆயுதங்களை பயன்படுத்தி 3 லட்சத்திற்கும் அதிகமான கொரிய மக்களை அமெரிக்கா கொன்று குவித்தது. போரில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவோம் என்று மிரட்டினர். வடகொரியாவை இணைத்துக்கொள்வதற்காக இந்த அளவிற்கு காட்டுமிராண்டித்தனமான போர்க் குற்றத்தில் ஏகாதிபத்திய போர்வெறியர்கள் ஈடுபட்டனர்.

ஆனால் 1940–50ல் அமெரிக்க ஆக்கிரமிப்பு படைகளின் அன்றைய ஜெனரல் ராபர்ட்ஸ் கூறியதைப் போல "அத்தீபகற்பத்தை முழுமையாக இணைத்துக்கொள்ளும்" கனவு நிறைவேறவில்லை, போர்–எதிர்ப்பு அமைதி–விரும்பும் சோசலிச முகாம் அமைதியான இணைந்திருத்தல் என்ற கோட்பாட்டை விடாப்பிடியாகப் பின்பற்றுவோம் என்று பிரகடனப்படுத்தியதால் அக்கனவு பலிக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் ஏகாதிபத்திய சக்திகள் எந்தவொரு சோசலிச அரசைத் தாக்கினாலும் திருப்பித் தாக்கத் தயங்கமாட்டோம் என்றும் அது அறிவித்தது.

வடகொரியாவை ராணுவ ஊடுருவல் மூலம் வலுக்கட்டாயமாக ஆக்கிரமிக்க நினைக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நயவஞ்சகத் திட்டத்தை மாபெரும் ஸ்டாலினும், மா சே துங்கும் புரிந்துகொண்டனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வடகொரியா மீது ராணுவத்தாக்குதல் நடத்தினால் பாட்டாளி வர்க்க சர்வதேசிய சித்தாந்தத்தின்படி சோவியத் யூனியனும் சீனாவும் வடகொரியாவின் பக்கம் நிற்போம் என்று உறுதிபூண்டன. எனவேதான் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டினை மதிக்காமல் நவீன நாசகார பேரழிவு ஆயுதங்களைக் கொண்டு வடகொரியா மீது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தாக்குதல் தொடுத்ததும், சீனா, அப்போதுதான் சோசலிசத்தை கட்டமைத்துவந்தாலும், அதனை தனது தாய்மண்ணின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாகப் பார்த்தது. எனவே அமெரிக்காவின் மிருகபலமிக்க ராணுவத்தை எதிர்த்துப் போரிட அது தனது சோசலிசத் தொண்டர்களை வடகொரியாவுக்கு அனுப்பியது. சோவியத் யூனியனும் அனைத்து உதவிகளையும் வழங்கியது.

மிருகபலமிக்க அமெரிக்காவை எதிர்த்து விரட்டுவதில் உறுதியும் தீரமுமிக்க சோசலிச சித்தாந்தத்தை உய்த்துணர்ந்த சோசலிசப் படையினர் வெற்றிகண்டனர். இறுதியாக, தீரமிக்க கொரிய மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை மண்டியிட வைத்தனர், அதோடு மூன்று ஆண்டுகள் ஒரு மாதம் நடைபெற்ற கொரியப் போர் 1953இல் முடிவுக்கு வந்தது. கொரிய மக்கள் வெற்றியோடு மோதல் முடிவுக்கு வந்தது.

ஆனால் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட தென்கொரியாவை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அனுமதிக்கவில்லை, இதனால் டிபிஆர்கேவும் (வடகொரியாவும்) தென்கொரியாவும் தொடர்ந்து இரு வேறு நாடுகளாகவே தொடர்ந்தன. ஆக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலையீடு, விரிவுவாதக் கொள்கைகளால் ஒன்றாகவே இருக்கவேண்டும் என்ற கொரியமக்களின் ஆசை நிறைவேறாமல் போய்விட்டது.

கொரியப் போரில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் படுதோல்வியின் மூலம் ராணுவம் மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட அவர்களது 'வல்லமை' என்பது வெறும் மாயை என்பது நிரூபிக்கப்பட்டதோடு போரின் முடிவை அணுகுண்டுதான் தீர்மானிக்கும் என்ற மாயையும் தகர்க்கப்பட்டது. ஒட்டுமொத்த வரலாறும், அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் இன்னமும் நாசகார போர்களைத் தூண்டுகின்றது என்பதையும், அமைதிக்கும் ஜனநாயகத்திற்கும் கொடிய எதிரி என்பதையும், சுதந்திரத்தின் மீதும் தேசிய விடுதலைமீதும் ரத்த வெறிபிடித்துத் தாக்கும் நாசகார எதிரி என்பதையும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

ஒரு சிறிய நாடாக இருந்தாலும் அம்மக்கள் சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் மிகவும் முன்னேறிய சித்தாந்தமாம் கம்யூனிச சித்தாந்தத்தின் வழிகாட்டுதல்படி கிளர்ந்தெழுந்து போராடினால் அவர்களால் எந்த ஏகாதிபத்திய சதியையும் முறியடிக்க முடியும் என்ற உண்மையையும் கொரியப் போர் நிரூபித்தது.

### ஒருதுருவ உலகத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தங்குதடையற்ற ரௌடித்தனம்

வலுவான சோசலிச முகாம் இருந்தவரையில் அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான ஏகாதிபத்திய–முதலாளித்துவ சக்திகளின் போர்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## வடகொரியா

# உலக அளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் இத்தருணத்தின் தலையாய தேவையாகும்

4ம் பக்கத் தொடர்ச்சி

வெறிக்கு மிகப்பெரிய தடையாக விளங்கியது. ஆனால் திருத்தல்வாத குருச்சேவ் தலைமைக்கு வந்த பின்னர் ஏகாதிபத்திய முகாமின் அணுகுண்டு மிரட்டலுக்கு அடிபணிந்து, சமாதான சகவாழ்வு என்ற பெயரில் ஏகாதிபத்திய முகாமை தாஜா செய்யத் தொடங்கியது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர் அச்சுறுத்தலை சமாளிக்க மாபெரும் மா சே துங் தலைமையிலான சோசலிச சீனா அணு ஆயுதங்களைத் தயாரிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானது.

மா சே துங் உயிரோடு இருந்தவரையில் ஏகாதிபத்தியத்தின் தாக்குதல் மிரட்டல்களிலிருந்து அனைத்து சோசலிச நாடுகளையும் பாதுகாக்கும் அரணாக சீனா விளங்கியது. ஆனால் மாவோ இறந்தபின்னர் திருத்தல்வாதத்திற்கு சீனா விழுந்தபிறகு (அது இறுதியில் 2004இல் எதிர் புரட்சியில் முடிந்தபிறகு) அதிகார பலம் ஏகாதிபத்தியங்களின் பக்கம் சாய்ந்துவிட்டது.

இறுதியாக, ஏகாதிபத்திய–முதலாளித்துவ உலகின் ஆதரவில் நடந்த திருத்தல்வாத சதியால் சோசலிச முகாம் தகர்ந்த பிறகு, அமெரிக்க ஏகாதிபத்திய முதலைகள் தங்களது வல்லாதிக்க, சண்டித்தன, மிரட்டும் திட்டங்களை எவ்வித எதிர்ப்புமின்றி கடைபிடிக்கத் தொடங்கினர். தங்களது சர்வாதிகார உத்தரவுகளுக்குக் கீழ்படிய மறுக்கும் நாடுகளை நவீன–காலனியாதிக்கத்தின் மூலமாகவோ அல்லது ராணுவத் தாக்குதல் மூலமாகவோ அல்லது தங்களது சிஐஏ மற்றும் டிஐஏ மூலமாக அடங்கமறுக்கும் தலைமைகளுக்கு எதிராகக் கலகங்களை உருவாக்கி ராணுவப் புரட்சி மூலமாகவோ ஆட்சிகளை மாற்றியோ அல்லது முழுவீச்சிலான போர்களை நடத்தியோ ஒட்டு மொத்த உலகையும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டும் என்பதே அவர்களது கொள்கையாக உள்ளது. எனவே அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்கு எதிராக தாக்குபிடிப்பது பலவீனமான நாடுகளுக்கு மிகுந்த சிரமமாக உள்ளது.

### அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளோ அவர்களது கூட்டணி நாடுகளோ அணு ஆயுத உற்பத்தியை ஏன் கைவிடக்கூடாது?

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மற்றொரு திமிர்த்தனத்தின் உச்சிக்கும் சென்றுள்ளனர். தங்கள் வசம் உள்ள அணு ஆயுதங்களைக் கைவிடாமல், அணு ஆயுதங்கள் உள்ளிட்ட நவீன கொடிய ஆயுதங்கள் உறுபத்தியைக் குறைக்காமல் மற்ற நாடுகள் அணு ஆயுதங்கள் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று கேட்கின்றனர், மேலும் மிரட்டுகின்றனர். அணு ஆயுதங்களை தொடர்ந்து நவீனபடுத்தியும் பேரழிவு ஆயுதங்களை புதிதுபுதிதாகக் கண்டுபிடித்தும் வருகின்றனர்.

அமெரிக்கா இதுவரை 1054 அணு ஆயுதச் சோதனைகளை நடத்தியுள்ளது. இது மற்ற அனைத்து நாடுகளும் செய்த ஒட்டுமொத்த சோதனைகளை விட மிக அதிகமாகும். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்தான் முதன் முதலில் அணுகுண்டைத் தயாரித்தனர், உலகின்மீது அணு குண்டை முதன் முதலில் வீசி பீதி, அச்சுறுத்தல், பேரழிவு மற்றும் முன்னெப்போதும் கண்டிராத பேரழிவுகளை நடத்தியிருப்பதும் அமெரிக்காதான்.

நபாம் குண்டுகள், ஏஜெண்ட்–ஆரஞ்சு போன்ற நாசகார ஆயுதங்கள் வியட்நாம், ஈராக், சிரியா இன்னும் பிற நாடுகளுடனான போரில் அவர்களால் பயன்படுத்தப்பட்டு லட்சக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர், பல லட்சக்கணக்கான மக்கள் கதிரியக்கம்–தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். 'பரஸ்பரம் உத்திரவாதப் படுத்தப்பட்ட அழிப்பு' என்பது 1962 முதல் அமெரிக்காவின் அணுஆயுதங்கள் தயாரிப்பை வழிநடத்தும் ராணுவத் திட்டத்தின் பெயராகும்.

தற்போது கிட்டத்தட்ட 7,000 அணு ஆயுத ஏவுகணைத் தளவாடங்கள் அமெரிக்காவிடம் இருக்கிறது. டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசாங்கத்தின் 'அணு ஆயுத நவீனமயமாக்கல் திட்டத்தின்' மதிப்பு 125 லட்சம் கோடி டாலர்கள் முதல் 146 லட்சம் கோடி டாலர்கள் இருக்கும் என்று அமெரிக்காவின் ஆயுதங்கள் கட்டுப்பாட்டு அசோசியேசன் கணக்கிட்டுள்ளது. தனது அணு ஆயுதத் தளவாடங்களை மேம்படுத்துவதற்கு 1 லட்சம் கோடி டாலர்களுக்கு மேல் செலவு செய்யப் போவதாக அமெரிக்க அரசாங்கமும் அறிவித்துள்ளது.

சண்டித்தனம் செய்வதற்கு ஏதுவாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அணு ஆயுத பலத்தைப் பெருக்கிக்கொள்ளும் கேள்விகேட்பாரற்ற உரிமை தங்களுக்கு மட்டுமே இருப்பதாகக் கூறுவதைத் தானே இது காட்டுகிறது. அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் குறித்து ஐநா சபையில் விவாதிக்கும் போது அவர்களும் அவர்களது கூட்டணி நாடுகளும் விசித்திரமான வாதத்தை முன்வைக்கின்றனர். தங்களைத் தவிர வேறு யார் கைகளிலும் அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக இருக்காது என்று கூறுகின்றனர். எனவே மற்றவர்களை அணு ஆயுத உற்பத்தியை நிறுத்துமாறும் கோரும் இவர்கள், அணு ஆயுதம் வைத்திருக்கும் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா, பிரான்சு, இஸ்ரேல், இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய 8 நாடுகள் அந்தத் தடையை தங்களுக்கு விதிக்க மறுக்கின்றனர்.

### அணு ஆயுதப் பரவலை முற்றிலும் நிறுத்தவேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மறுதலிக்கின்றனர்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாக்குதலை சமாளிப்பதற்காக வெகுவிரைவில் சோவியத் யூனியனே ஒரு காலத்தில் அணு குண்டு தயாரித் திருந்த போதிலும், ஹிரோஷிமா, நாகாசாகியில் அமெரிக்கா நடத்திய அணுகுண்டு வீச்சுத் தாக்குதலின் கொடூரத்திற்குப் பின்பு ஸ்டாலின் தலைமையிலான சோசலிசமுகாம் பூமியை போரிலிருந்து விடுவிக்க ஒட்டுமொத்தமாக அணு ஆயுதங்கள் உள்ளிட்ட அனைத்து ஆயுதங்களின் உற்பத்தியையும் கைவிடவேண்டும் என்று அறை கூவல் விடுத்தது. உலகின் அமைதியை நேசிக்கும் மக்கள் அனைவரும் இந்த முன்மொழிவுக்கு முழு ஆதரவாக நின்றனர். ஆனால் அமெரிக்க ஏகாதி பத்தியத்தின் தலைமையிலான ஏகாதிபத்திய முதலாளித்துவ முகாம் உலக மக்களின் இந்தக் கருத்துக்கு மதிப்பளிக்கவில்லை. மாறாக, மேலும் நவீனமான அணு ஆயுதங்களை தொடர்ந்து உற்பத்தி செய்தது, அனைத்துவிதமான நாசகார நயவஞ்சக செயல்களிலும் ஈடுபட்டது.

ஆனாலும் கூட பல்வேறு நாடுகளில் ஏகாதிபத்திய–எதிர்ப்புப் போராட்டங்களும் சர்வதேச கம்யூனிச இயக்க அலையும் சேர்ந்து ஓரளவிற்கு ஏகாதிபத்திய வல்லாதிக்கத்திற்கும் போர்வெறிக்கும் எதிர்வினை புரிந்தன. போராட்டம் உக்கிரமடைந்தால் ஏகாதிபத்திய சண்டித்தனம் ஓரளவிற்குக் கட்டு படுத்தப்படும் என்பது உழைக்கும் மக்கள் மனதில் படிப்படியாகப் பதிந்தது.

ஆனால் ஸ்டாலினின் மறைவிற்குப் பின்பு உலக கம்யூனிச இயக்கத்தை திருத்தல்வாதம் பற்றிக்கொண்டது, மாவோவின் மரணத்திற்குப் பின்பு அதன்பிடி மேலும் இறுகியது, இதனால் அமைதிக்கான உக்கிரமான இயக்கம் உலகம் முழுவதும் தளரத்தொடங்கியது, ஒட்டுமொத்தமாக ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்ற நியாயமான கோரிக்கைக்கும் ஏகாதிபத்தியங்களை நிர்ப்பந்திப்பது குறிப்பிடத்தக்க அளவு குறைந்தது.

இறுதியில் இந்த நியாயமான கோரிக்கையே பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தங்களது சர்வதேச சண்டித்தனத்தை புதுப்பிக்கப்பட்ட உத்வேகத்துடன் அதிகப்படுத்தினர். கொரியப் போர் முடிந்த உடனேயே அமெரிக்க ராணுவத்தின் உதவியுடன் கியூபாவில், குவாதமாலா மற்றும் ஈரானில் பின்னர் வியட்நாமில் நீண்டகாலப் போர் துவங்கப் பட்டதையும் இங்கே நினைவு கூற விரும்புகிறோம். அங்கே அமெரிக்க ஆதரவுடன் ஆட்சிமாற்ற சதி வேலைகள் மற்றும் ராணுவத் தலையீடுகள் நடந்தன.

ஆக, அணுஆயுதத்தை தாங்கள் மட்டும்தான் வைத்திருக்க வேண்டும் வேறு எவரும் வைத்திருக்கக் கூடாது என அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது கூட்டணி நாடுகளும் தீர்மானிப்பதை அனைத்து உண்மைகளும் நிரூபிக்கின்றன. ஒருவர் நவீன அணு ஆயுதங்களை வைத்திருக்கலாம் மற்றவர் வைத்திருக்கக் கூடாது என இரண்டு நாடுகளுக்கு இருவேறு தரத்தை நிர்ணயிப்பது அநியாயமானதாக இல்லையா? அணு ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் தொடர்ந்து தங்களது ஆயுதபலத்தை பெருக்கிக் கொள்ளலாம், ஆனால் மற்றவர்களை அணு ஆயுதத் திட்டத்தை செயல்படுத்தமுடியாதபடி வலுக் கட்டாயமாக தடுப்பார்கள். இது அமைதியைப் பேணிக்காப்பதற்கான நாகரீகமான நடவடிக்கையா அல்லது உலகையே தங்களுக்கு மட்டுமேயான களம் என்று ஆக்குவதற்கான அப்பட்டமான வல்லாதிக்க நடவடிக்கையா?

### பொருளாதாரத் தடையைத் திணிக்கும் கொடுங்கோன்மை

தங்களுக்கு 'கீழ்ப்படியாத' நாடுகளை நேரடியாக ராணுவத் தாக்குதலோடு அச்சுறுத்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றின் மீது ஒன்றன்பின் ஒன்றாக கடுமையான பொருளாதாரத் தடைகளை யும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் விதித்து வருகின்றனர். எவரது வாழ்வுரிமையையும் பறிக்கும் அதிகாரத்தை இவர்களுக்கு வழங்கியது யார்? இத்தகைய மனிதாபிமானமற்ற பொருளாதாரத் தடைகள் அமெரிக்கா மீது திணிக்கப்படுமானால், அந்நாட்டு மக்கள் அதனை எவ்வாறு எடுத்துக் கொள்வார்கள்? இதை "ஜனநாயகபூர்வமான" நடவடிக்கை என்று அங்கீகாரம் வழங்குவார்களா?

தங்கள் நாட்டில் எத்தகைய சமூக–அரசியல் அமைப்பு வேண்டும், எப்படிப்பட்ட அரசாங்க முறை வேண்டும் என்று தீர்மானிக்கும் தடையற்ற உரிமை ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் உள்ளது. அந்நியத்தாக்குதலையோ அல்லது ஊடுருவலையோ எதிர்த்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் மறுக்க முடியாத உரிமை ஒவ்வொரு நாட்டிற்கும் உண்டு. எந்த ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தை, மிரட்டி தங்களது பொருளாதார ராணுவ பலத்தைப் பிரயோகித்து தங்கள் முன் மண்டியிட வைக்கும் கேள்விகேட்க முடியாத அதிகாரத்தை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் எப்படி அவர்களே எடுத்துக்கொள்ள முடியும்?

தொடர்ச்சியான மிரட்டலும் எப்போது வேண்டு மானாலும் தாக்கப்படலாம் என்ற அச்சுறுத்தலும் இருக்கும் நேரத்தில் தனது தற்காப்புக்காக தனது பலத்தைப் பெருக்கிக் கொள்வதை உலக அமைதிக்கான அச்சுறுத்தல் என்று எந்த அடிப்படையில் கூற முடியும்? உலக அமைதிக்கு, ஜனநாயகத்திற்கு மக்களின் வாழும் உரிமைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பது அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சிதான் என்பது தெளிவாகத் தெரிகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் மனித குலத்திற்கே மிகப்பெரிய எதிரி.

### வடகொரியாவை 'தீய சக்தி' என்று முத்திரை குத்தும் அமெரிக்க ஏகாதிபத்தியம்

வடகொரியா, கியூபா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளை நீண்ட காலத்திற்கு முன்பே "தீய சக்திகளின் அச்சு கூட்டணி" என்று அமெரிக்க ஏகாதிபத்தியம் அறிவித்தது. இந்த நாடுகள் எல்லாம் அதன் பிரதான தாக்குதல் இலக்குகள் என்றும் "தீய சக்திகளை வெற்றி கொள்ளும் கடமை தங்களுக்கு இருப்பதை" யாரும் கேள்வி கேட்கக் கூடாது என்பதே இதன் பொருளாகும். தங்களது 'கடமையை' நிறைவேற்றுவதற்கு ஐநா சபையை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் என்ற ஒருதலைப் பட்சமான ஒப்பந்தத்தின் பெயரில் மற்ற நாடுகளை

தொடர்ச்சி 11ம் பக்கம்

# முன்னாள் சோசலிச ஐரோப்பிய நாடுகளில் சோசலிச அமைப்பின் வீழ்ச்சிக்குப் பின் மக்களின் இன்றைய வாழ்க்கை நிலை

*(எமது மத்திய ஆங்கில பத்திரிகையான புரொலிடேரியன் எரா (Proletarian Era), அக்டோபர் 1, 2017 இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கமே இது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிந்தைய ஐரோப்பாவின் யதார்த்த நிலையையும் துயரத்தையும் குறித்து இங்கிலாந்து பொருளாதாரவாதியான எரிக் திரைட்சர் எழுதிய அக்கட்டுரையின் சுருக்கம்)*

ஜெர்மனியின் பெர்லின் பெருஞ்சுவருக்கு முன்னால் நின்றுகொண்டு ஜூன் 1987லில் அமெரிக்க ஜனாதிபதி ரீகன் கூறிய அறிவிப்பு: சோவியத் மக்கள் செய்யக்கூடிய ஒரு சரியான காரியமும் சுதந்திரத்தையும் சமாதானத்தையும் வெகுவிரைவாக முன்னெடுப்பதுமாக இருப்பதும் யாதெனில் … தளபதி கோர்பசேவ் அவர்களே, நீங்கள் சமாதானத்தை விரும்புவீர்களானால் – சோவியத் யூனியனுக்கும் கிழக்கு ஐரோப்பாவிற்கும் வளத்தை வேண்டுவீர்களானால், தாராளமயத்தை விரும்புவீர்களேயானால் இங்கு வாருங்கள், இந்த நுழைவாயிலுக்கு வாருங்கள், திருவாளர் கோர்பசேவ் அவர்களே, இந்த நுழைவாயிலை திறந்திடுங்கள், திருவாளர் கோர்பசேவ் அவர்களே, இந்த சுவரை உடைத்து நொறுக்குங்கள்… என்பதாகும்.

“சுதந்திரம்”, “ஜனநாயகம்”, “சமாதானம்” குறித்த நவீன– தாராள பேச்சுக்கள் ஒருபுறமிருக்க என்னவெல்லாம் வாக்குறுதியளிக்கப்பட்டதோ அவையெல்லாம் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிந்தைய கிழக்கு ஐரோப்பாவின் யதார்த்த வாழ்க்கையில் நிறைவேறவில்லை.

ரீகன் போன்றோர் சோவியத் யூனியனின் வீழ்ச்சி “சமாதானத்தையும்” “வளத்தையும்” கொண்டுவரும் ஒரு நிகழ்வாகும் என்று வர்ணித்திருப்பதை எண்ணிப்பாருங்கள். அதற்குப் பின்னால் கிழக்கு ஐரோப்பாவில் மற்றும் முன்னாள் சோவியத் கூட்டமைப்பில் சமாதானமோ வளமோ எதுவும் ஏற்படவில்லை என்ற உண்மையையும் பாருங்கள்.

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்துவந்த பெலாரஸ் மற்றும் உக்ரைன் நாடுகளை நேட்டோ (NATO– அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் இராணுவக் கூட்டமைப்பு) தனது பக்கத்திற்கு இழுக்க முனைந்தது. பெலாரஸ் அணிசேராமல் இருக்கிறது, உக்கிரைன் குடியரசு விக்டர் யனுகோவிச்சின் முன்னாள் ரஷ்ய ஆதரவு அரசாங்கத்தை அமெரிக்க ஆதரவுடன் இராணுவப் புரட்சியின்மூலம் பதவியிறக்கி தற்பொழுது உள்நாட்டுப் போரால் அது அவதியுற்று வருகிறது. அமெரிக்காவின் ஆதரவுபெற்ற மிகைல் சாகாஷ்விலி தலைமையிலான ஜார்ஜிய அரசாங்கம் பிரிந்துசென்ற குடியரசுகளான தெற்கு ஒசெடியா மற்றும் அப்காசியா விஷயத்தில் எவ்விதத்தூண்டுதலும் இன்றி ரஷ்யாவுடன் போருக்குச் சென்றது. இப்போர் சந்தேகத்திற்கு இடமின்றி நேட்டோவின் கூட்டாளியான ஜார்ஜியாவால் துவக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு ஐரோப்பிய யூனியனால் உருவாக்கப்பட்ட கமிஷனின் ஒரு சுதந்திரமான அறிக்கை இவ்வாறு கூறுகிறது, “சென்ற ஆண்டு நடைபெற்ற ரஷ்ய–ஜார்ஜிய போர் குறித்த விசாரணை அதிபர் மிகைல் சாகாஷ்விலியை கடுமையாக குற்றம்சாட்டுகிறது, அது திஸ்கின்வாலி நகரத்தின்மீது ஜார்ஜியா தனது நடத்திய கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்தான் போர் மூண்டதற்கான காரணம் எனக் கைகாட்டுகிறது”.

போரும் சமாதானமும் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கையில், 1991க்குப் பிந்தைய காலகட்டமானது குறிப்பாக அமைதியாக இருந்தது என்றோ, பனிப்போர் காலகட்ட சகாப்த நிலைத்தன்மையோடு ஒப்பிடுகையில் அமைதியாக இருந்தது என்றோ எவரும் கூறிட முடியாது. அமெரிக்காவானது ரஷ்யாவின் வாசல்வரை நேட்டோவை அதிரடியாக விரிவுபடுத்தியது, கிழக்கு ஐரோப்பாவிலிருந்த பெரும்பான்மையான முன்னாள் சோவியத் குடியரசுகளை நேட்டோவினுள் கொண்டுவந்துவிட்டது. பால்டிக் அரசுகளான லத்வியா, லிதுவேனியா, எஸ்தோனியாவையும் போலந்து, ஜார்ஜியாவையும் உள்ளிட்ட பால்கன் பிரதேசத்தில் நேட்டோவானது பல மோசமான போர்களை நடத்தியது. குறிப்பாக அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அப்பொழுது முடிவுக்கு வந்ததுபோல பற்பல போர் குற்றங்கள் நடந்த யுகோஸ்லேவேகியாவின் மீதான கிரிமினல் குண்டுவீச்சுக்களும் இதில் அடங்கும்.

மேற்கத்திய ஆதிக்கத்தால் விளைந்தது ஐரோப்பாவில் நிகழ்த்தப்பட்ட போர்கள் மட்டுமல்ல. அது மத்தியக்கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவிலும் மரணத்தையும் பேரழிவையும் கொண்டுவந்து அதனால் கணக்கில்லாத அகதிகள் அங்கிருந்து பொருளாதார ரீதியாக நிலைகுலைந்த தெற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவிற்கு படையெடுத்து வருகின்றனர். ஏற்கனவே பொருளாதார ரீதியில் நிலைகுலைந்திருக்கும் அகதிகளுக்கு எதிராக நடைபெறும் சீற்றத்திற்குப் பின்னாலுள்ள சமூக – பொருளாதார காரணிகளை ஒருவரால் புரிந்து கொள்ள முடியுமென்றாலும் இந்த ஒட்டுமொத்த நிகழ்வுப் போக்கு என்பது அமெரிக்க–நேட்டோ போரின் விளைவாகும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

காலப் (Gallup) என்ற அமைப்பில் 2013ல் நடத்தப்பட்ட ஓர் பரந்துபட்ட வாக்கெடுப்பு

15 முன்னாள் சோவியத் குடியரசுகளில் 11 சோவியத் குடியரசுகளின் 24 சதவீதத்தினர் பிரிந்துசென்றது நன்மைபயத்தது என்பதைவிட பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என்று கூறும் 51 சதவீதத்தினர் இருமடங்கினர் எனக் கூறியது.

“இந்தப் புள்ளி விபரத்தை ஒருகணம் யோசித்துப் பாருங்கள்: முன்னாள் சோவியத் குடியரசுகளில் வசிப்போரில் இருமடங்கினர் சோவியத் யூனியன் பிரிந்துசென்றது நன்மைபயத்ததைவிட தீமை பயத்ததே அதிகம் எனக்கூறுகின்றனர். உண்மை இவ்வாறு இருக்கையில், சோவியத் யூனியன் பிரிந்துசெல்வதற்கு சில ஆண்டுகளுக்குமுன்பு ரீகன் மற்றும் அவரது கூட்டாளிகள் சுதந்திரமும் வளமும் கொழிக்கும் சகாப்தம் வரப்போகின்றது என்று கூறியது முற்றிலும் பொய்யென்பது அம்பலமாகிவிட்டது. பொதுமக்களின் கருத்துக்கு மிக முக்கியமான உந்துதல் என்பது வாழ்க்கைத் தரமாகும். இந்த பொதுவான குறியீட்டில் அடங்கியிருப்பது வேலைவாய்ப்பு, ஒப்பீட்டளவிலான வாங்கும்சக்தி, கல்வி, மருத்துவ வசதிகளைப் பெறும் வாய்ப்பு, மற்றும்பல. இவ்வாறு பார்த்தால், கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதியினர் சோவியத் யூனியன் மற்றும் கம்யூனிசத்தின் மகிழ்ச்சிகர நாட்களுக்காக ஏங்குகின்றனர். ஏதோ அப்பொழுது பிரச்சினைகள் இல்லாமலிருந்தது என்பதல்ல. மாறாக பிரச்சினைகள் இருந்தது என்பதே உண்மை. ஆனால் தற்பொழுது இருக்கும் பிரச்சினைகளைவிட அன்று மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் முற்றிலும் வேறுவகைப் பட்டவையாகும்.

இளம் தலைமுறையினர் எதிர்காலத்தைப் பற்றிய நேர்மறை சிந்தனை கொண்டவர்களாக இருக்கிறார்கள் என பல நவீன– தாராளவாத சிந்தனையாளர்கள் முன்வைக்கின்றனர். இவ்வுண்மையானது ஒருவகை விலகலாகும். ஏனெனில், இத்தகைய உணர்வு ஏற்படுவதற்கான ஒரு பகுதி காரணம், இளம் தலைமுறையினர் தங்களது சொந்த நாடுகளை அப்படியே விட்டுவிட்டு வெளியேறிவிடும் வாய்ப்பு உள்ளது என்பதால்தான். லித்வியாவிலுள்ள சூழல்குறித்து ஆய்வுசெய்து பொருளாதாரவாதிகள் மைக்கைல் ஹட்சனும் ஜெப்ரி சொம்மர்ஸூம் இவ்வாறு கூறுகின்றனர்: “1940களில் ஸ்டாலினின் நாடுகடத்தலால் ஏற்பட்டதைவிட நவீன– தாராளவாத பொருளாதார சிக்கன நடவடிக்கைகள் அதிக மக்களின் இடப்பெயர்ச்சி இழப்புகளை உருவாக்கியுள்ளது. நீண்ட நாளைய வளர்ச்சியை பாதிக்கும் வகையில் அரசாங்கம் கல்வி, சுகாதாரம் மற்றும்பிற அடிப்படை சமூக கட்டமைப்பு செலவுகளை குறைப்பதால் வேலையின்மையால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தில் அவதியுறுவதைவிட தமது வாழ்வை வளமாக்கிக்கொள்ள இளம் தலைமுறையினர் குடிப்பெயர்ச்சி செய்கின்றனர். ஒட்டுமொத்த மக்கட்தொகையில் பெரும்பகுதி தொழிலாளர்களைக்கொண்ட 12 சதவீதத்தினர் தற்பொழுது வெளிநாட்டில் வேலைசெய்கின்றனர்”.

சாராம்சத்தில், ஐரோப்பிய யூனியனுடன் இணைந்த முன்னாள் சோவியத் குடியரசுகளில் நவீன– தாராளவாதக் கொள்கைகள் சமூக– பொருளாதார வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் கடுமையான நெருக்கடியை உருவாக்கியுள்ளது. அதல பாதாளத்தில் விழும் குழந்தை பிறப்பிலிருந்து துவங்கி பெருகிவரும் அனாதைக் குழந்தைகள்வரை ஒளிமயமான எதிர்காலம் என்று சொல்லப்படும் பதம் ஒருவரை ஒருகணம் யோசிக்கவைக்கும். மேலும், சோவியத் யூனியனுக்குப் பிந்தைய காலகட்டம் ஒரு அபாயகரமான இனவேற்றுமை அரசியலைத் தோற்றுவித்துள்ளது. இதில் அந்தந்த அரசாங்கங்கள் பெரும்பான்மை இனத்தைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவையாவும் பிரஸ்ஸல்ஸ் மற்றும் வாஷிங்டன் கன்சென்சஸ் என்பதனால் வழிநடத்தப்படுவதால் அது சிறுபான்மையினரை, குறிப்பாக ரஷ்யர்களை மோசமாகச் சித்தரிக்கின்றனர்.

உண்மையில், பொருளாதார வீழ்ச்சியும் சமூகத்தின் மீது அதன் தவிர்க்கயியலாத பாதிப்பும் முன்னாள் சோவியத் கூட்டமைப்பு நாடு ஒவ்வொன்றிலும் தெரிகிறது. உதாரணத்திற்கு, ஐரோப்பிய யூனியனுடன் 2007ல் இணைந்த ருமேனியாவில், “மிகவும் வளமிக்க மாவட்டங்களில் காலாவதியான கட்டுமானவியலாளர்களால் கைவிடப்பட்ட கட்டிடங்கள் பல உள்ளன. 30 லட்சம் மக்கள் வசிக்கும் நகரத்தில் வளம் மிக்க சில உள்வட்டங்கள் செசஸ்கு காலத்திலிருந்து முற்றிலும் மாறாத பகுதியால் சூழப்பட்டுள்ளது.

கிரேக்க நாட்டிற்கு கடன்கள் எவ்வாறு சுமையாக ஆனதோ, அது போன்றே ருமேனியாவிற்கு ஐஎம்எஃப்யின் மீட்சிக்கடனானது (Bail out) சுமையாக ஆனது. நவீன– தாராளவாத சிக்கன நடவடிக்கைகளின் அனுபவத்தை ருமேனியா பெற்றுவிட்டது. இதனால் பொதுத்துறையில் சம்பளம் குறைக்கப்பட்டுவிட்டது. விற்பனை வரி உயர்வு, வேலையின்மை, மகப்பேறு, முடநிலை சலுகைகள் குறைப்பு ஆகியவை இதில் அடங்கும். இதே காட்சிதான் தெற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் காணப்படுகின்றது. மேலும் ஜெர்மனியில் கணக்கிலடங்கா ஜெர்மன் தொழிலாளர்களும் கல்வியாளர்களும் வேலை மற்றும் சலுகைகளின்றி இருப்பதோடு லட்சக்கணக்கானோர் பழைய கிழக்கு ஜெர்மனி நாட்களை எண்ணி ஏங்குகின்றனர்.

முன்னாள் சோவியத் குடியரசுகளில் வாழும் கணிசமான மக்கள் சோவியத் யூனியனில் இருந்த காலத்தை எண்ணி ஏங்குவதும் ஆச்சரியத்திற்குரியதல்ல. அவர்கள் தமது கஷ்டங்களையும் நுகர்வுப் பொருட்களின்றி இருந்ததையும் போலீஸ், அரசு மற்றும் இதுபோன்றவை குறித்த ஞாபகங்களைக் கொண்டுள்ளனர். ஆனால் அதேவேளையில் தமது மாதம் முழுவதுமான கோடை விடுமுறையைக் குடும்பத்துடன் கழித்ததையும் உறுதிபடுத்தப்பட்ட வேலைவாய்ப்பு, வருமானம், இலவசமான அனைவருக்குமான கல்வி, மருத்துவ சேவை மற்றும் பற்பல அம்சங்களையும் அவர்கள் நினைவுகூறுகின்றனர். சோவியத் யூனியனின் வாழ்வியலில் இருந்த இவை யாவற்றையும் திட்டமிட்டவகையில் மேற்கு நாடுகளின் பிரச்சாரம் துடைத்தெறிந்துவிட்டு முதலாளித்துவ ஆட்சி கோலோச்சுவதோடு ஏதோ அது கடவுள் கொடுத்த வரம் அதை யாரும் கேள்வி கேட்கக்கூடாது என்பதை போன்று சித்தரிக்கின்றனர்.

வருமானத்தில் சமத்துவமின்மையும் தூண்டிவிடப்படும் இனவேற்றுமை வன்முறைகளும் அமெரிக்க பாணி உணர்வும் கிழக்கு ஐரோப்பாவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், இதை பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை. இதோடு இணைந்து பொருளாதார ரீதியிலான நெருக்கடியைப் பயன்படுத்தி மிகவும் தீவிர வலதுசாரி பாசிசக் கட்சிகள் வளர்ந்துவருவதும் நவீன– தாராளவாத கருத்தொற்றுமையை எதிர்கொள்வதில் இடதுசாரிகளின் ஒட்டுமொத்தத் தோல்வியும் மிகவும் ஆபத்தான ஒரு வரலாற்றுத் தருணத்தை இன்று கிழக்கு ஐரோப்பாவில் உருவாக்கி அது நீண்ட நெடிய காலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சூழலை தோற்றுவித்துள்ளது.

ஆனால் வாழ்வின் அனைத்துத் பிரச்சினைகளுக்கும் முதலாளித்துவம் ஒரு தீர்வல்ல. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு ஒரு புதிய விதமான கஷ்டத்தை கிழக்கு ஐரோப்பாமீது மேற்கத்திய பாணி முதலாளித்துவம் திணித்துள்ளது. அரசு இயந்திரத்தைக் கொண்டு அங்கு நுகர்வுப் பொருட்களை இன்று யாரும் தடுக்கவில்லை, மாறாக வாங்கும் திறனிருந்தால் அது அனைவருக்கும் கிடைக்கிறது. துரதிருஷ்டவசமாக அது பெரும்பாலானோர்க்குக் கிடைப்பதில்லை. ஏனெனில் அதை வாங்கும் சக்தி அவர்களிடம் இல்லை.

மாறாக, குறைவாகப் பெறுவதற்குக்கூட அவர்கள் அதிகம் உழைக்கவேண்டும். நல்ல வாய்ப்புக்களுக்காக தமது பிள்ளைகள் வெளிநாட்டிற்கு ஓடும் நிலையிலிருந்து வெளிவர அவர்கள் உழைக்கவேண்டும். சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பிந்தைய ஐரோப்பாவின் அமெரிக்கக் கனவின் யதார்த்தம் இதுதான் ■

*(ஆதாரம்: டெலிசர் தொலைக்காட்சி, ஆகஸ்ட் 19, 2017)*

# பணமதிப்பு நீக்கத்தின் ஒவ்வொரு வாக்குறுதியும் பொய்யெனவும் ஏமாற்றெனவும் நிரூபிக்கப்பட்டுவிட்டது

1ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் பற்று அட்டைகள் (Debit Cards) வைத்திருக்கும் 22சதவீதம் பேரில் 11 சதவீதத்தினர் மட்டுமே அதனைப் பயன்படுத்துகின்றனர். வங்கிக் கணக்கு வைத்திருப்போரில் அதிக பட்சமாக 5லிருந்து 6 சதவீதத்தினர் மட்டுமே இணையதள பரிவர்த்தனை மேற்கொள்கின்றனர். கணினி அறிவு (Computer Literacy) விகிதம் என்பது வெறும் 6.15 சதவீதமே. உபயோகத்திலிருக்கும் கைபேசிகளில் (Hand Phones) 25சதவீதம் மட்டுமே ஸ்மார்ட் போன்களாகும். ஆனால், அனைத்து போன்களுக்கும் இணையதள வசதி இருப்பதில்லை. இணையதள வேகத்தைப் (Internet Speed) பொருத்தமட்டில் இந்தியா 96வது தர வரிசையில் உள்ளது. ஆனால், இணையதள குற்றங்களைப் (Cyber Crimes) பொருத்த மட்டில் இந்தியா உலகில் 6வது இடத்தில் இருக்கின்றது. பெரும்பாலானவை 'ரேன்சம்வேர்' போன்ற இணையதளத் தாக்குதலுக்கு (Cyber-Attacks) உள்ளாகும் வாய்ப்பைக் கொண்டிருக்கின்றது. கணினி ஊடுருவலுக்கான (Hacking) வழக்கு மற்றும் தண்டனை விகிதமானது இந்தியாவில் மிகவும் மோசமாக உள்ளது. இதன் காரணமாக, ரொக்கமற்ற பொருளாதாரத்திற்கு ஒரேயடியாக மாறுவதென்பது ஒரு இட்டுக்கட்டப்பட்ட கதையேயன்றி வேறொன்றுமில்லை. இது இப்போது உண்மைகளுடன் ஒத்துப்போகின்றது.

ரொக்கமற்ற பொருளாதாரம் என்ற கோஷத்தின் மூலம், ஆளும் பகுதியினர் மற்றுமொரு பொய்மையைக் கூறி மக்களை முட்டாள்களாக்கிட முயற்சித்து வருகின்றனர் எனவும் நாங்கள் சுட்டிக் காட்டியிருந்தோம். ரொக்கமற்ற பரிவர்த்தனை என்பதன் பொருள் அது பணத்தை இல்லாமல் செய்துவிடும் என்பதல்ல. எனவே, ரொக்கமற்ற முறைக்கு மாறுவது என்பதை, ஒரு வாதத்திற்கு என வைத்துக்கொண்டாலும் 'பணத்தின் ஆட்சி'யை முடிவுக்குக் கொண்டுவருவது என அதற்குப் பொருளல்ல. எனவே, கருப்புப்பணத்தை ஒழிப்பது என்பதும் அதற்குப் பொருளல்ல. மாறாக, பல்வேறு வடிவத்திலான இத்தகைய ரொக்கமற்றப் பரிவர்த்தனை முறை எனப்படுவது, நவீனமயம் மற்றும் சுலபமான இயக்கம் என்ற போர்வையில் இருப்பினும், அது சமீபத்திய தொழில்நுட்ப வளர்ச்சிகளைப் பயன்படுத்தி பொருளாதார ஒடுக்குமுறையை இன்னும் அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடேயாகும். முதலாளித்துவம் ஏகாதிபத்தியம் உள்ளவரையில் இத்தகைய 'மூலதனத்தின் ஆட்சி' அதாவது 'பணத்தின் ஆட்சி'யிலிருந்து தப்பித்திட வழியேதுமில்லை.

மூன்றாவதாக, அரசாங்கமானது பழைய நோட்டுக்களை செல்லாததாக்கி வரி ஏய்ப்பாளர்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் நிதி ஆதாரத்தை விரிவுபடுத்துவது எனப் பேசிக்கொண்டிருக்கின்றது. 2016–17ம் ஆண்டில் வருமான வரிக்கணக்குத் தாக்கல் செய்தவர்களின் எண்ணிக்கை அதற்கு முந்தைய ஆண்டைவிட கிட்டத்தட்ட 25 சதவீதம் அதிகமென நிதி அமைச்சகம் கூறுகின்றது. ஆனால் இது முன்னெப்போதும் நடந்திராத ஒன்றல்ல. உதாரணத்திற்கு 2011–12ல் அவ்வாறு வருமான வரிக்கணக்குத் தாக்கல் செய்தவர்கள் சதவீதம் 80சதவீதத்திற்கு அதிகமாகவும் அதற்கு அடுத்த ஆண்டு அது 30சதவீதத்திற்கு அதிகமாகவும் அதிகரித்தது. மிகத்தெளிவாக இது ஒரு நள்ளிரவில் நடைமுறைக்கு வந்த பணமதிப்பு நீக்கத்தின் தாக்கத்தினால் ஏற்பட்ட ஒன்றல்ல.

அடுத்ததாக, பணமதிப்பு நீக்கத்திற்குப் பின்னர், ரிசர்வ் வங்கிக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும் எனும் பூர்ஷ்வாப் பொருளாதாரவாதிகளின் பகுதியினரைச் சார்ந்த திறமைமிக்க மூளையைக் கொண்டவர்கள் சிலரின் விசித்திரமான வாதமாகும். நோட்டுக்களைச் செல்லாததாக்கிடும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்காக விளக்கிப் பேசுகையில், ரூபாய் 15.44 லட்சம் கோடியில் தோராயமாக 3 லட்சம் கோடி செல்லாத நோட்டுக்கள் ஒருபோதும் புதிய நோட்டுக்களாக மாற்றப்படாது எனவும் ஆகையினால், அவை "அழிக்கப்பட்ட அல்லது மறைந்துபோன கருப்புப்பணம்" எனக் கருதப்படும் என அவர்கள் வாதிட்டனர். அவ்வாறு 'அழிக்கப்பட்ட கருப்புப் பணம்' ரிசர்வ் வங்கிக்குக் கிடைக்கும் ஒரு பண மழையாக இருக்கும் என்றும் அது மத்திய அரசாங்கத்திற்கான ஈவுத்தொகையாக செலுத்தப்படும் என்றும் கூறினர். ஆனால் விளைந்த பலன் எதிர்மாறாக உள்ளது.

செல்லாததாக்கப்பட்ட நோட்டுக்களில் 99 சதவீதம் வங்கியில் செலுத்தப்பட்டதால் ரிசர்வ் வங்கியின் வருமானம் கடுமையாகக் குறைந்தது. ரிவெர்ஸ் ரெபோ ஆக்ஷன்ஸ் என்கின்ற அதாவது, வங்கி அமைப்பு முறைக்குள் அதிகப்படியாக இருக்கும் ரொக்கத்தை அகற்றும் நடவடிக்கை என்பது, இன்கிரிமென்டல் கேஷ் ரிசர்வ் விகிதத்தை உயர்த்துதல் என்கின்ற அதாவது 2016, செப்டம்பர் 16ம் தேதி முதல் நவம்பர் 11ஆம் தேதி வரையில் பெறப்பட்ட வைப்புத்தொகையில் ரிசர்வ் வங்கியுடன் வங்கிகள் கட்டாயம் வைத்திருக்க வேண்டிய ரொக்க வைப்புத்தொகையின் சதவீதத்தை 100சதவீதம் வைத்திருப்பது மற்றும் சந்தையை நிலைப்படுத்தும் பிணையங்கள் மூலம் (Market Stabilisation Bonds) கடன் பத்திரங்கள் வழங்குவதில் உச்சவரம்பை அதிகரித்தல் (அது வங்கிகளிலிருக்கும் மிகையான ரொக்கத்தை உறிஞ்சியெடுத்துவிடும்) போன்ற ஏற்கனவே இருக்கின்ற வழக்கமான நடவடிக்கைகள் யாவும் தோல்வியைச் சந்தித்தது நிரூபணமானது.

இதற்கும் மேலாக, நோட்டுக்களை அச்சடிப்பதில் ரிசர்வ் வங்கியின் செலவினமானது கடந்த ஆண்டு முதல் இரட்டிப்பாகிவிட்டது. அச்சடித்தல் மற்றும் அதனையொட்டிய துணைச் செலவினங்கள் 21,000 கோடி ரூபாய்களாக இருக்கையில், வங்கியில் செலுத்தப்படாமல் இருக்கின்ற செல்லாததாக்கப்பட்ட நோட்டுக்கள் வெறும் 16,000 கோடி ரூபாய்களே. கூட்டிக் கழித்துப் பார்த்தால் கடந்த ஆண்டில் ரிசர்வ் வங்கியின் வருமானம் 23.56 சதவீதமாக குறைந்துள்ள அதே வேளையில் அதன் செலவினம் 107.8சதவீதமாக அதிகரித்ததன் விளைவாக ரிசர்வ் வங்கியின் உபரி ரொக்கமானது கடும் வீழ்ச்சியை அடைந்துள்ளது.

எனவே, ரிசர்வ் வங்கியானது மிகப்பெரும் தொகையை அரசாங்கக் கருவூலத்திற்குச் செலுத்திவிடும் எனக் கூறியவர்கள் இப்போது ரிசர்வ் வங்கியானது கடந்த ஆண்டில் செலுத்தியிருப்பதில் பாதியளவேயான வெறும் 30,659 ரூபாயை மட்டுமே ஈவுத்தொகையாக செலுத்தியிருப்பதனைப் பார்க்கலாம்.

இறுதியாக, ஊழலைக் குறைத்திடுவது என்ற கூற்றின் நிலைமையைப் பற்றிய ஒரு வார்த்தை. பணமதிப்பு நீக்க நடவடிக்கையின்போது, பழைய நோட்டுக்களுக்குப் பதிலாக வெளியிடப்பட வைக்கப்பட்டிருந்த பணமானது செல்வாக்கு மிகுந்த மற்றும் அதனைச் செலுத்திடும் தகுதி கொண்டவர்களுக்கு உறிஞ்சிக்கொடுக்கப்பட்டுவிட்டது என்ற அறிக்கைகள் நாடு முழுவதிலுமிருந்து குவிந்தன. ஆக, வயதானவர்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட சாமானிய குடிமக்கள் பழைய நோட்டுக்களை மாற்றிட பல நாட்கள் மணிக்கணக்கில் நின்றுகொண்டிருக்கையில், இந்தியாவிலிருக்கும் ஒருசில பணக்காரர்கள் மற்றும் அதிகாரம் மிக்கவர்களுக்கு பல கோடிக்கணக்கில் புதிய ரூபாய் நோட்டுக்கள் அவர்களின் வீட்டு வாசலிலேயே வினியோகிக்கப்பட்டது. ஊழலிலிருந்து தூய்மைப்படுத்தப்படும் செயல்முறைப் போக்கில் இவ்வமைப்பு இருந்திருக்குமானால், இவ்வாறு நடைபெற்றிருக்க முடியுமா?

எமது ஆங்கில ஏடான 01.12.2016 தேதியிட்ட புரொலிடேரியன் எராவில் வெளிவந்த முந்தைய கட்டுரையில் பணமதிப்பு நீக்க நடவடிக்கையானது புதிய வடிவங்களிலான ஊழலை உருவாக்கியிருக்கின்றது எனக் குறிப்பிட்டிருந்தோம். உதாரணமாக, மிகப்பெரும் தள்ளுபடி விலையில் பழைய நோட்டுக்களை வாங்கிடுவதற்கான விற்பனையாளர்களின் குழுக்கள் களத்தில் காணப்பட்டன. ஆக அவர்கள் வங்கிகளில் அப்பணத்தை செலுத்தியவுடன் அவர்களால் விரைவான வருமானத்தை ஈட்ட முடிந்தது. இது அப்பட்டமாகவே கணக்கில் கொண்டுவரப்படாத பணமாக இருப்பதால் அதுவும் கருப்புப்பணமேயாகும்.

இவ்வமைப்பில் ஊழல் எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்கின்றது என்பதற்கும் நடைபெற்றுக் கொண்டு அத்துடன் வளர்ந்துகொண்டிருக்கும் இத்தகைய முறைகேட்டில் ஈடுபட்டுள்ளோர் எவர், அதற்குத் உதவி புரிவோர் எவர், அதற்கு உடந்தையாக இருப்போர் எவர் என்பதற்கும், சம்பிரதாய இனிப்பு தடவிய வார்த்தைகளைப் பேசி அப்பட்டமான பொய்மையில் ஈடுபட்டுக் கொண்டு பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் வெகுஜனங்களிடமிருந்து உண்மையை எவர் மறைத்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை நிரூபிப்பதற்கும் இவ்விரண்டு உதாரணங்களே போதுமானதாகும்.

ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாதான் மிகவும் ஊழல் மிகுந்த நாடு என்றும் அங்கே பொதுச் சேவைகளை அணுகிட கிட்டத்தட்ட பத்தில் ஏழு பேர் லஞ்சம் தரவேண்டியிருக்கின்றது என்றும் ஒரு ஆய்வு இப்போது வெளிப்படுத்தியிருக்கின்றது. இவையனைத்தையும் பிரதமர் அவர்கள் பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்கு முந்தைய நாள் "இந்நடவடிக்கையானது ஊழலுக்கு எதிரான, கருப்புப் பணத்திற்கு எதிரான, கள்ள நோட்டுக்கு எதிரான போராட்டத்தில் சாமானிய மனிதனின் கைகளைப் பலப்படுத்தும்" எனக் கூறியதுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். மேலும், இந்நடவடிக்கை "ஒரே அடியில் பயங்கரவாத, போதைக் கும்பல், ஆட்களைக் கடத்தும் மற்றும் கொடுஞ்செயல் புரியும் கும்பல் உலகங்களை" அழித்தொழித்துவிட்டது எனக் கண்டுபிடித்து 2016 டிசம்பர் 27ஆம் தேதியில் அவர் கூறிய கூற்றையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இதை எவர் நம்புவர்?

## பணமதிப்பு நீக்க நடவடிக்கையினால் பாதிப்பிற்குள்ளானோர் எவர்?

இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (The Centre for Monitoring Indian Economy) பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்கான செலவு ரூபாய் 1.28 லட்சம் கோடிகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. பணமதிப்பு நீக்க நடவடிக்கையின்போது எமது கட்சி திட்டவட்டமாகக் கூறியது போல, இந்தப் பெரும் ஏமாற்று வேலையினால் ரொக்கப் பணத்தையே சார்ந்திருக்கின்ற 90சதவீதம் சாமானிய பாடுபடும் மக்களும் சிறு வியாபாரிகளுமே மோசமாகப் பாதிக்கப்படுபவர்களாக இருக்கின்றனர். உண்மைகள் அதனுடன் ஒத்துப்போகின்றன.

தடை செய்யப்பட்ட நோட்டுக்களை வங்களில் செலுத்திடவும், மாற்றிடவும் நாட்கணக்கில் மணிக்கணக்கில் வரிசையில் நின்று துயரப்பட்ட நேர்மையான குடிமக்களின் விலைமதிப்பற்ற 103 அப்பாவி உயிர்கள் பறிபோயின. குடும்பத்தேவைகளுக்காக தங்களின் சொற்ப வருமானத்தை நம்பியிருந்தவர்கள் பண நோட்டுக்களைத் திடீரென செல்லாததாக்கியதன் காரணமாக ஏதும் செய்ய முடியாமல் தற்கொலை செய்துகொண்ட சம்பவங்கள்கூட வெளியாயின.

சிறு விவசாயிகள், செங்கல் சூளைத் தொழிலாளர்கள், சிறு விற்பனையாளர்கள், கட்டுமானம் மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் அத்துடன் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் போன்ற மிகவும் விளிம்பு நிலையிலுள்ள பிரிவினர் மத்தியிலும்கூட பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் விளைவுகள் பூதாகரமாகவும் கடுமையாகவும் இருந்தது. நோட்டுக்கள் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பண நெருக்கடி மற்றும் பயிர்களுக்கான உள்ளீடுகளான விதைகள் மற்றும் உரங்கள் போன்றவற்றின் விலை உயர்வு, அத்துடன் விளைபொருட்களின் அடிபாதாள வீழ்ச்சியினால் ஏற்பட்ட இரட்டைத் தாக்குதல்களால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் ஏழை விவசாயிகளும் விவசாயக் கூலிகளுமேயாகும். பணத் தட்டுப்பாட்டால், காய்கறி விலைகள் வீழ்ச்சியுற்றன. கோதுமை பயிரிடுவது தள்ளிப் போனது. குளிர்காலப் பயிர்களுக்கான உள்ளீடுகள் போதுமான அளவில் கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் ஊதியத்தில் வீழ்ச்சியும் ஏற்பட்டது. பண முடக்கத்தின் வீச்சு குளிர்கால மற்றும் கோடைப் பயிர் காலத்திலும்கூட தொடர்ந்துகொண்டிருந்தது.

உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மூன்று லட்சத்திற்கும் மேலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளின் சார்பான அகில இந்திய உற்பத்தியாளர்கள் அமைப்பு (All India Manufacturer's Organisation) மேற்கொண்ட ஒரு ஆய்வானது, வேலை வாய்ப்பில் 60சதவீத வீழ்ச்சியும் மார்ச் 2017ல் முடியும் ஆண்டு வருவாயில் 55சதவீத

தொடர்ச்சி 8ம் பக்கம்

# பணமதிப்பு நீக்கம் ஏழை மக்களை மேலும் துன்பத்திலும் வறுமையிலும் தள்ளியிருக்கின்றது

7ம் பக்கத் தொடர்ச்சி

இழப்பும் ஏற்பட்டுள்ளதாகக் கூறுகின்றது. சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனத் துறைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டதால் கிட்டத்தட்ட அனைத்துத் தொழிற்சாலைச் செயல்பாடுகளும் ஸ்தம்பித்துவிட்டதென்றும் அந்த ஆய்வு தெரிவித்திருக்கின்றது. இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் மற்றுமொரு அறிக்கையானது, வேலையாட்களில் அதிகமாகப் பாதிப்பிற்குள்ளானவர்கள் 25சதவீத தினக்கூலிகளும், சுய தொழில் நிறுவனம் வைத்திருப்பவர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் நடைபாதை வியாபாரிகள் அடங்கிய 8சதவீதத்தினருமே என்று கூறுகின்றது. உதாரணமாக, ஆண்களும் பெண்களும் ஒப்பந்தக்காரர்களால் அழைத்துச்செல்லப்படும் அல்லது தனி நபர்களால் தினசரி வேலைக்கு அழைத்துச் செல்லப்படும் தொழிலாளர் சந்தை அல்லது அதற்காக ஏற்படுத்தப்பட்ட பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. வெறும் 10 நாள் வேலை மட்டுமே கிடைக்கின்றது என்றும் அதுவும் மிகக் குறைந்த சம்பளத்தில் கிடைக்கின்றதென்றும் அதுவும்கூட வழக்கத்திற்கு மாறாகக் காலதாமதமாகவே கிடைக்கின்றதென்றும் தினக்கூலி வேலை செய்வோர் புலம்பினர். அமைப்புசாரா தொழிற்சாலைப் பிரிவினர் தற்காலிக மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களாயிருக்கும் தொழிலாளர்களில் 46 சதவீதம் பேருக்கு சம்பளம் தருவதற்கு பணமில்லையெனப் புகார் கூறினர். நகரங்களில் தினசரி சம்பளம் வாங்குவோரில் கிட்டத்தட்ட 65 சதவீதம் பேர் பணமதிப்பு நீக்க நடவடிக்கையினால் வேலை கிடைக்காமல் தங்களது கிராமங்களுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். 15 லட்சம் எண்ணிக்கையிலான வேலையென்பது இழக்கப்பட்டுவிட்டதென கார்ப்பொரேட் ஊடகங்கள் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டன. அதிகார பூர்வமான அறிக்கைக்கு மாறாக, உண்மையான எண்ணிக்கை அதைவிட இன்னும் அதிகமாகவே இருக்கும்.

அந்த அளவிற்கு நிலைமை இன்றும்கூட அதிகம் மாறவில்லை. ரொக்கப் பொருளாதாரம் திடீரென அடைக்கப்பட்டதால், ஷாப்பிங் ஆர்க்கேடுகளிலும் மால்களிலும் கூட்டம் குறைந்து நுகர்வோர்கள் செலவிடுவது முடங்கிப்போனது. வீட்டு உபயோகப் பொருட்களின் நுகர்வு அப்படியே மந்தமாக இருப்பதால் ரொக்கப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட அதிர்வு தொடர்ந்து உணரப்பட்டு வருகின்றது. ஆக, ஆளும் ஏகபோகங்களின் கட்டளைக்கிணங்க பூர்ஷ்வா அரசாங்கத்தால் அடுக்கடுக்காக தொடுக்கப்படும் பொருளாதாரத் தாக்குதல்களினால் ஒவ்வொரு நாளும் அவதியுற்றுவரும் ஒடுக்கப்படும் சாமானிய மக்கள்தான் இத்தகைய பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் ஒட்டுமொத்த சுமையையும் தாங்கிக்கொண்டிருக்கின்றனர்.

எதிர்பார்த்தபடியே, இதே கால கட்டத்தில் மிகப் பெரும் தொழிலதிபர்களின் செல்வமானது பன்மடங்கு அதிவேகமாக அதிகரித்துள்ளது. 1 சதவீத மிக மேன்மையான அதாவது சூப்பர் பணக்காரர்கள் நாட்டின் ஒட்டுமொத்த செல்வத்தில் பாதிக்கும் மேல் சொந்தமாக்கிக்கொண்டுள்ளனர். “அவரது இந்த துணிச்சலான நடவடிக்கையால் ஏழை மக்கள் நிம்மதியாகத் தூங்குகின்றனர், அதே வேளையில் பணக்காரர்களுக்கு இது தூக்கமில்லா இரவாக இருக்கின்றது” என பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்குப் பின்னர் பிரதமர் அவர்கள் கூறியிருந்தார். உண்மை நிலை அவரது அத்தகைய வார்த்தைகளைப் பிரதிபலிக்கின்றதா?

ஆயினும், அத்தகைய நடவடிக்கை பாடுபடும் மக்கள் வாழ்வில் பேரழிவை ஏற்படுத்தும் என்பது மட்டுமே எதிர்பார்க்கப்பட வேண்டும். பணமதிப்பு நீக்க நடவடிக்கை அறிவிக்கப்பட்டவுடனேயே, அத்தகைய நடவடிக்கை ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தை குழப்பத்தில் ஆழ்த்திவிடும் என்றும் அதனால் மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் சாமானிய மக்களே எனவும், குறிப்பாக ஏழை விவசாயிகள், சிறு வியாபாரிகள், விற்பனையாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்கள் எனவும் எமது கட்சியின் மத்தியக் கமிட்டியானது எச்சரிக்கை விடுத்தது. இப்போது, ஏற்பட்டிருக்கும் உண்மை நிலை அதனைப் போதுமான அளவிற்குத் தெளிவுபடுத்துவதாகவும் எமது முன்கணிப்பை உறுதி செய்வதாகவும் உள்ளது. ஆரம்பத்தில் ஏமாற்றுப் பிரச்சாரத்தை நம்பியவர்கள், பணமதிப்பு நீக்க நடவடிக்கை கருப்புப்பணத்தை வேரறுத்துவிடும் என்று எண்ணியவர்கள்கூட அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்பதை இப்போது உணர்ந்துகொண்டு வருகின்றனர்.

## நிலவும் பொருளாதார மந்தம்

ஒரு பக்கம், பூர்ஷ்வா அரசாங்கமும் அதற்கு ஒத்திசைந்து போகின்றவர்களும் முடிந்தவரையில் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தாலும், ஏற்கனவே நெருக்கடியினுள் சிக்கித்தவிக்கும் இந்திய முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அதிகரித்து வரும் மந்த நிலையை எப்படியும் மறைத்திட முடியாது. ஒரு நாட்டின் பொருளாதார விளைவளவு (Economic Output) அந்நாட்டின் ஜிடிபியைக் கொண்டுதான், அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டுதான் (Gross Domestic Product) அளவிடப்படுகிறது என்பது தெரிந்ததே. ஜிடிபியின் வளர்ச்சி விகிதமானது எந்த அளவிற்குப் பொருளாதாரம் வளர்ந்துகொண்டிருக்கின்றது என்பதை அளவிடுகின்றது. ஒரு காலாண்டுக்கான நாட்டின் ஜிடிபி வளர்ச்சியுடன் முந்தைய வருட காலாண்டின் வளர்ச்சியை ஒப்பிடுவதன் மூலம் அது செய்யப்படுகின்றது. ஜிடிபியின் வளர்ச்சி விகிதமானது ஜிடிபியின் நான்கு கூறுகளால் உந்தப்படுகின்றது. ஜிடிபி வளர்ச்சி விகிதத்தின் பிரதான உந்துதல் தனிநபர் நுகர்வாகும் (C- Consumption). இரண்டாவது கூறு வியாபார முதலீடாகும் (I- Investment). வளர்ச்சியின் மூன்றாவது உந்துதல் அரசாங்கத்தின் செலவினமாகும் (G- Government Spending). நான்காவது கூறு நிகர வர்த்தகமாகும் (NT - Net Trade) அதாவது [ஏற்றுமதி (–) இறக்குமதி].

ஜிடிபி – வளர்ச்சியைக் கூட்டுவதற்கு ஏற்றுமதி உதவிபுரிகின்றது. அதே சமயம் இறக்குமதியானது ஜிடிபி வளர்ச்சியைக் குறைக்கின்றது. எளிமையாக் கூறுவதானால் ஜிடிபி எனப்படுவது நுகர்வு, முதலீடு, செலவினம் மற்றும் நிகர வர்த்தகம் ஆகியவற்றின் கூட்டலாகும். (GDP = C + I + G + NT). ஆக, உள்நாட்டு நுகர்வு (C- Consumption) குறைந்தால் அல்லது அரசாங்க செலவினம் (G - Government Spending) அதிகரித்திடாமல் மற்றும் நிகர வர்த்தகம் (NT - Net Trade) எதிர்மறையாக இருந்துகொண்டு அதாவது ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாக இருந்துகொண்டு வியாபார முதலீடு (I- Investment) வீழ்ச்சியடைந்தால் ஜிடிபி வீழ்ச்சியுற்று அது குறைவான வளர்ச்சி விகிதமாகப் பிரதிபலிக்கும்.

ஜிடிபி வளர்ச்சிப் புள்ளிவிபரங்களை ஊதிப் பெருக்கிக் காண்பித்திடவும் பிற நாடுகளின் வளர்ச்சி விகிதத்தைவிட அதிகமாக இருக்கின்றதென முன்னிறுத்திக் காண்பித்திடவும் அரசாங்கத்தின் சம்பளப் பட்டியலிலிருக்கும் பூர்ஷ்வாப் பொருளாதார வல்லுனர்கள், அடிப்படை ஆண்டான 2004–2005ஐ 2011–12 ஆக மாற்றுவது உள்ளிட்ட அளவுகோல்களில் கடந்த ஆண்டு எண்ணற்ற மாற்றங்களைக் கொண்டுவந்து, ஜிடிபியைக் கணக்கிடும் ஒரு புதிய முறையியலை அறிவித்தனர். அந்தப் புதிய முறையியல் 2013–14ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதத்தை திடீரென 4.7லிருந்து 6.9சதமாக ஊதிப்பெருக்கிக் காண்பித்தது. அதாவது 50சதவீதம் உயர்த்திக் காண்பித்தது.

ஆனாலும்கூட, இந்தத் திருத்தப்பட்ட முறையியலாலும்கூட ஒரு மந்தமான வளர்ச்சி இருப்பதை மறைத்திட முடியவில்லை.

அரசாங்கமும் அதற்கு வக்காலத்து வாங்கு பவர்களும் ஒரு அதிகப்படியான வளர்ச்சி விகிதத்தை எட்டிடலாம் என முன்னிறுத்திக் காட்டியதற்கு மாறாக, நாட்டின் ஜிடிபி வளர்ச்சி கடந்த காலாண்டில் அதாவது ஏப்ரல் முதல் ஜூன் வரையில், 5.7சதவீதமாக மட்டுமே இருந்தது எனக் கூறப்பட்டது. முந்தைய காலாண்டிலும்கூட, அரசாங்கம் முன்கணிப்பு செய்ததற்கும் மிகக் குறைவாக அது 6.1சதவீதமாக இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதனால், திருத்தப்பட்ட முறையியல் நடப்பில் இருந்தபோதிலும், வளர்ச்சி விகிதத்தில் அங்கே தொடர்ச்சியான வீழ்ச்சி காணப்பட்டது. பழைய முறையிலான கணக்கீட்டின்படி பார்த்தால் வளர்ச்சி விகிதமானது 5.7சதவீதத்திற்கு மாறாக அது 2.8 சதவீதமாகவே இருக்கும்.

ஜிடிபி வளர்ச்சியில் வீழ்ச்சி என்பதன் தாக்கம் என்ன? இதன் பொருள், பொருளாதாரத்தில் தொய்வு அல்லது மந்தம் ஏற்பட்டிருக்கின்றது என்பதாகும். ஜிடிபியில் ஒரு வீழ்ச்சி ஏற்படுவது என்பது, தொழிற்சாலை உற்பத்திப்பொருட்களின் வீழ்ச்சி, முதலீடு குறைவது, பொது செலவினம் குறைக்கப்படுவது, குடும்ப வருமானத்தில் கடும் சரிவு, அதிகரித்துவரும் வேலையின்மை போன்ற பொருளாதாரக் குறியீட்டில் (Economic indicators) பிரதிபலிக்கும். வேலை வாய்ப்பு குறைந்து ஊதியத்தில் வீழ்ச்சி ஏற்படுமானால், மக்களின் வாங்கும் சக்தி குறைகின்றது. வாங்கும் சக்தி குறைவதால், அதாவது நுகர்வோர்கள் செலவிடுவது குறைந்தால் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் தேங்கி தவிர்க்கவியலாமல் பொருளாதாரப் பின்னடைவு ஏற்படுகின்றது. பொருளாதாரப் பின்னடைவின்போது வேலை வாய்ப்பு மேலும் குறைந்து, பொதுவாகச் செலவிடுவது வீழ்ச்சியுறுவதால் முதலாளித்துவ உடமையாளர்கள் அவர்களின் லாபத்தைத் தக்கவைத்துக்கொள்ள ஊழியர்களை வேலையை விட்டு நீக்கி அவர்களின் ஊதியத்தைக் குறைத்து தொழிற்சாலைகளில் எவ்வித புதிய முதலீடும் செய்திட விரும்புவதில்லை.

மந்தமான பொருளாதார வளர்ச்சி என்பது வேலையின்மை அதிகரிப்பதால், ஊதியம் குறைவதினால் மற்றும் குடும்ப வருமானம் சரிவதனால் பொருளாதாரத்தில் செலவிடுவதில் சரிவு என்பதுடன் வழக்கமாகத் தொடர்பு கொண்டுள்ளது. அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்டதன்படி, இத்தகைய அனைத்து அம்சங்களும் பணமதிப்பு நீக்க பிந்தைய காலத்தில் அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கின்றன. எனவே, ஜிடிபி வளர்ச்சியின் வீழ்ச்சி என்பது ஐயத்திற்கிடமின்றி பேரழிவுமிக்க நடவடிக்கையான நோட்டுக்கள் தடையினால் ஏற்பட்ட விளைவேயாகும்.

## பணமதிப்பு நீக்கத்தை எதிர்த்த பிரபல பொருளாதார நிபுணர்கள்

பூர்ஷ்வா அரசாங்கம் மற்றும் ஆளும் முதலாளித்துவத்தின் சம்பளப் பட்டியலில் உள்ள ஒரு சில பொருளாதார வர்ணனையாளர்களைத் தவிர ஒவ்வொருவரும் இந்தப் பொருளாதாரப் பின்னடைவின் காரணம் பணமதிப்புநீக்க நடவடிக்கையே எனக் கூறுகின்றனர் என்பதைக் குறிப்பிடுவது ஏற்புடையதாக இருக்கும். முதலாளித்துவ அமைப்பிற்குச் சாதகமானவர்கள் என அறியப்பட்ட பக்குவம் வாய்ந்த பொருளாதாரவாதிகளும்கூட இந் நடவடிக்கைக்கு அவர்களின் எதிர்ப்பைக் காட்டிடும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள்.

பணமதிப்புநீக்க நடவடிக்கைக்கு முந்தைய நாள் இடமாற்றம் செய்யப்பட்ட முன்னாள் ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரகுராம் ராஜன் 500, 1000 ரூபாய் நோட்டுக்கள் சட்டரீதியாகச் செல்லாத தாக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு தான் ஒருபோதும் ஆதரவாக இருக்கவில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் அவர், தான் பணிபுரிந்தபோது பணமதிப்புநீக்க நடவடிக்கையின் பாதகமான விளைவுகள் குறித்து அரசாங்கத்தை எச்சரித்ததாகவும்கூடக் கூறினார். மற்றொரு முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னரான பிமல் ஜலான் என்பவர், தனது பணிக்காலத்தில் இத்தகைய நடவடிக்கை ஒப்புதலைப் பெற்றிருக்க முடியாது என்றும்கூட கூறியிருக்கின்றார்.

இந்திய அரசாங்கத்தின் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகரான (Chief Economic Advisor) கௌசிக் பாசுவின் கூற்றுப்படி, பணமதிப்புநீக்க நடவடிக்கையானது ஒரு மிகப்பெரிய தவறும், பொருளாதாரத்தில் எதிர்மறை விளைவை ஏற்படுத்தக்கூடியதும் ஆகும். நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் பணமதிப்புநீக்க நடவடிக்கையானது ஒரு “கொடுங்கோன்மையான செயல், அது நம்பிக்கையின் அடிப்படையிலான பொருளாதாரத்தின் ஆணிவேரை சாய்த்துவிட்டது” என்று கூறினார். தெளிவாகவே, பாஜக அரசாங்கமானது இத்தகைய மனிதர்களின் கருத்துக்களை உதாசீனப்படுத்தி உயர்மதிப்பு நோட்டுக்களைச் சட்டரீதியாகச் செல்லாததாக்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

தொடர்ச்சி 9ம் பக்கம்

# சக்திவாய்ந்த மக்கள் இயக்கங்களால் மட்டுமே இத்தகைய பொருளாதாரத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முடியும்

8ம் பக்கத் தொடர்ச்சி

## அரசாங்கத்தின் முன்னுக்குப்பின் முரணான செயல்

பாஜக அரசாங்கமும் அதன் தலைவர்களும் இதைச் செய்கிறோம், அல்லது "அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சிக்காக" 'பெரிதாக, புதிதாக முன்னெப்போதுமில்லாத வகையில்' அதைச் செய்கிறோம் எனப் பாசாங்கு செய்துகொண்டு, ஆரவாரமாகப் பேசி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். பெருமையாகப் பேசப் பட்ட நடவடிக்கைகள், சீர்திருத்தங்கள் யாவும் துன்பத்தையும் வறுமையையும் கொண்டு வந்திருக்கிறது என்பதை மக்கள் காண்கின்றபோது, அரசாங்கத்தின் உயர் பதவிகளில் இருப்போர் உடனடியாக தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு வேறு விதமாகப் பேச ஆரம்பிக்கின்றனர்.

உதாரணமாக, பணமதிப்புநீக்க நடவடிக்கையின் பேரழிவு விளைவினால், சிக்கிக்கொண்டதால் இப்போது நிதியமைச்சர் அவர்கள் வேறு ஒரு பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கின்றார். "இது ஒரு உலகளாவிய மந்தம், ஜிடிபி வளர்ச்சி குறைந்ததற்கு பணமதிப்பு நீக்க நடவடிக்கை பொறுப்பல்ல", நோட்டுக்களைத் தடை செய்ததன் நோக்கம் "பணத்தைப் பறிமுதல் செய்வதற்காக அல்ல" ஆனால் அது "மிகையான ரொக்கப் பொருளாதாரத்தைச் சரி செய்வதற்கே", "நீண்டகால அடிப் படையில் அதன் அனுகூலமான பலன்களைக் கண்டிடலாம்" மற்றும் இன்னும் பலவற்றையும் அவர் கூறுகின்றார். இப்போது என்ன சொல்லப் பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதற்கும் பண மதிப்புநீக்க நடவடிக்கைக்கு முந்தைய நாள் உச்சியில் நின்றுகொண்டு என்னவெல்லாம் முழங்கப்பட்டது என்பதற்குமிடையில் இருக்கின்ற ஒவ்வாமை மிகவும் அப்பட்டமாகத் தெரிகின்றது. இது மக்களை முட்டாளாக்கிட எடுக்கப்பட்ட மற்றுமொரு விவேகமான, அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சியுமே அன்றி வேறொன்றுமில்லை.

## கருப்புப்பணம் பற்றி மீண்டும் ஒரு வார்த்தை

முன்னதாக, ஓர் ஆதாரத்தைச் சுட்டிக்காட்டி, 72 லட்சம் கோடிகளுக்கும் மேலான கருப்புப் பணத்தை இந்தியாவின் தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் மற்றும் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் சுவிஸ் வங்கியில் தங்களின் சொந்தக் கணக்குகளில் வைத்திருக்கின்றார்கள் என்பது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே தெரிய வந்தது எனக் கூறினோம். ஏகாதிபத்திய மூலதனத்தின் ஓர் அமைப்பான உலக வங்கிகூட உண்மையை மறைத்திட எவ்வளவோ முயன்றாலும், வேறு வழியின்றி 160 லட்சம் கோடி ஜிடிபியில் 23.2சதவீத அதாவது 37.5 லட்சம் கோடி கருப்புப் பணமானது 2015–16 ஆண்டின்படி இந்தியாவில் புழக்கத்தில் உள்ளது என ஒப்புக்கொண்டது.

சமீபத்திய மற்றொரு அறிக்கையானது இந்தியாவில் கருப்புப்பணம் கிட்டத்தட்ட 93 லட்சம் கோடிகள் இருப்பதாக மதிப்பிட்டுள்ளது. இது ஒட்டுமொத்த விவசாய மற்றும் தொழிற்சாலைகள் உருவாக்கிய வருமானத்தைவிடவும், மொத்த அரசாங்க செலவினத்தின் மத்திய, மாநில அளவைவிடவும் அதிகமாகும். இந்த அளவிற்கு கருப்புப்பணம் இருப்பதனால், அரசாங்கப் புள்ளி விபரங்களை ஒப்பிடுகையில் 1970களின் மத்தியிலிருந்து நாட்டின் சராசரி வளர்ச்சியானது சராசரியாக 5சதவீதம் இழக்கப்பட்டு வருகின்றது.

மற்றுமொரு ஆய்வானது, 100சதவீத சட்ட விரோத நிதிப் புழக்கத்திற்கு (Illicit Finance Flows-IFF) பொய்யான விற்பனை பில்கள் மூலம் மோசடி வியாபாரம் செய்வது காரணமாயிருக் கின்றது என்று கூறுகின்றது. அதாவது ஏற்றுமதி பில்களில் (Invoices) உண்மையான மதிப்பிற்கும் மேலாக மிக அதிக மதிப்பைக் காட்டி அதன் மூலம் ஏற்றுமதிக் கான சலுகைகளை அதிகமாகப் பெற்றிடுவதும் மற்றும் இறக்குமதி பில்களில் மிகக் குறைவான மதிப்பைக் காட்டி அதன் மூலம் செலுத்தவேண்டிய சுங்க வரியைக் குறைவாகச் செலுத்துவதாகும். கடந்த பத்து ஆண்டுகளில் மோசடியான ஹவாலா எனும் சட்டவிரோதப் பணப்பரிமாற்றம் மூலம் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கருப்புப்பணம் எப்படியும் 286 லட்சம் கோடி ரூபாய்களிலிருந்து 666 லட்சம் கோடி ரூபாய்கள் வரையில் இருக்கும். (Frontline - 26.05.2017)

ஆனால், கணக்கில் கொண்டுவரப்படாத இத்தகைய கருப்புப் பணத்தை கண்டுபிடித்து வெளிக்கொணர்வதற்கும் தடுப்பதற்கும் அரசாங் கத்திற்கு எந்த விருப்பமும் இல்லை. மாறாக, நிதி சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைத் தகவல்களைத் தானாகவே பரிமாறிக்கொள்ளும் சமீபத்திய உலகளாவிய நடைமுறையின்படி, சுவிட்சர் லாந்துடனான தகவல் பரிமாறிக்கொள்ளும் உடன்படிக்கை 2019, செப்டம்பர் மாதம் முதல்தான் அமுலுக்கு வரும். (எகனாமிக் டைம்ஸ்–19.06.2017)

அது ஏன் இரண்டு ஆண்டுகளுக்குப்பின்னர் வரப்போகின்றது? அது இப்போது ஏன் வராது? திட்டமிட்டபடி ஒப்புக்கொண்ட தேதிக்குப்பின்னர் ஒரு வாதத்திற்காக அத்தகைய தகவல்களில் தேர்வு செய்யப்பட்ட சில தகவல்கள் கசிய விடப்படலாம் என கருதப்படுமானால்கூட, இந்தியாவின் கருப்புப்பணக்காரர்கள் சுவிஸ் வங்கிக் கணக்கிலிருக்கும் அவர்களின் சட்டவிரோதப் பணத்தை உடனடியாகப் பிற பாதுகாப்பான வரிஏய்ப்பு சொர்க்க பூமிகளுக்கு நிச்சயம் மாற்றிவிடுவார்கள். பணமதிப்பு நீக்கம் ஒருபோதும் பிரச்சினையின் ஒரு விளிம்பைக்கூடத் தொடாது, தொடவும் முடியாது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

## அழுகிய காலாவதியாகிப்போன முதலாளித்துவ அமைப்பு கருப்புப்பணத்தை உருவாக்கிக்கொண்டும் ஊழலை வளர்த்துக்கொண்டும் இருக்கின்றது

2016, டிசம்பர் 1 தேதியிட்ட எமது ஆங்கில ஏடான புரொலிடேரியன் எராவில், கருப்புப்பணம் பற்றி விளக்குகையில், எக்காளமிட்டு, முழங்கப் பட்ட பணமதிப்புநீக்க நடவடிக்கையால் உண்மையில் பலனடைந்தவர்கள், மிகப்பெரும் ஏகபோகவாதிகள், நேர்மையற்ற வியாபாரிகள், சாமானிய வெகுஜனங்களின் துன்பத்தையும் வறுமையையும் வைத்து வியாபாரம் செய்யும் எப்போதும் முளைத்துக்கொண்டிருக்கும் இடைத் தரகர்களே என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

கருப்புப்பணக்காரர்கள் மீது ஒரு சிறு சிராய்ப்புகூட ஏற்படாது. ஏனெனில், கருப்புப் பணமானது நிலவுகின்ற முதலாளித்துவப் பொருளாதார அமைப்பிற்குள்ளிருந்துதான் உருவாக்கப்படுகின்றது. அதற்கான இயக்க சக்தி பணத்திற்கான தீவிரப் பேராசை, எவ்வழியிலா வது மேலும் மேலும் பணத்தை ஈட்டுவது மற்றும் ஊழல் வரிவசூல் இயந்திரத்தின் உதவியுடன் வேண்டுமென்றே வரி ஏய்ப்பு செய்வது ஆகியன வாகும். பணமீட்டுவதை நோக்கிய பேரார்வம், அதைச் சம்பாதிப்பதற்கான வழி அல்லது மூலம் எதுவாயிருந்தாலும், அது எவ்வளவு தரம் தாழ்ந்து இருந்தாலும், ஏமாற்றுத்தனம், வஞ்சகத்தனம், அதற்காகக் கூனிக்குறுகி பணக் கையாடல் செய்வது போன்றவற்றின் மூலம் நிறைவேற்றப் படக்கூடிய பணத்திற்கான இத்தகைய பேராசை தான் அதற்கான இயக்க சக்தி.

இத்தகைய தரம்தாழ்ந்த மனப்பான்மைதான் செழித்தோங்கி வளரும் கருப்புப்பணத்தைப் பிறப்பிக்கின்றது. இந்த அழுகிப்போன காலாவதி யாகிப்போன அமைப்பில் மிகவும் சலுகை பெறக்கூடியவர்கள் இருக்கின்றனர். அவர்கள் தீய வழியில் செல்வம் குவிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர். முதலாளித்துவம் கருப்புப்பணத்தை உருவாக்குவது மட்டுமின்றி அதனைப் பேணி வளர்க்கின்றது. பின்னர், முதலாளித்துவ அமைப்பிற்கு சேவைசெய்து அதற்கு உடந்தையாயிருக்கும் அரசாங்கமானது எங்ஙனம் கருப்புப்பணத்திற்கு எதிராகப் போராடும்.

இது போன்றே, ஊழல் என்பது வெறுமனே சலுகைபெற்ற ஒரு திருட்டுக் கும்பல், நேர்மையற்ற அமைச்சர்கள், அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தினரின் கோஷ்டி அல்லது தண்டனை யிலிருந்து தப்பித்திடுமளவிற்கு பெரும் பணபலத்தை வைத்திருக்கும் ஒரு சில தொழிலதிபர்கள்– வியாபாரிகளின் கைவேலையல்ல. கருப்புப்பணம் போன்றே ஊழல் எனும் கேள்வியனது, நிலவு கின்ற அழுகிப்போன முதலாளித்துவ அமைப்புடன் பிரிக்கவியலாதபடி இணைந்துள்ளது. சீரழிந்த சாகும் தருவாயிலிருக்கும் முதலாளித்துவ அமைப்பில், ஊழலானது நிறுவனப்படுத்தப் பட்டுள்ளது. ஊழல் வழியில் சட்டவிரோதமாக லாபமீட்டுபவர்களும் ஊழலின் எல்லையை விரிவுபடுத்தி, அதனை எல்லாவிடங்களிலும் வியாபித்திருக்க வைத்திருக்கின்றனர்.

இவ்வமைப்பே ஊழலானது, அது ஊழலில் தான் உயிர்வாழ்கின்றது. எனவே, வெறுமனே பணமதிப்புநீக்க நடவடிக்கை அல்லது ஒன்றல்லது இரண்டு ஏமாற்றுப்பேர்வழிகளை கைது செய்வது, அதுவும் சிறிதளவு கருப்புப்பணம் வைத்திருப்பவர் களை, எளிதாகச் சிக்குபவர்களை, எதிராக நிற்பவர்களைக் கைது செய்வது போன்ற சில கண்துடைப்பு நடவடிக்கைகளினால் ஊழலானது துடைத்தெறியப்பட முடியாது. இவைகள் யாவும் தற்போதைய பாஜக அரசாங்கம் அல்லது முந்தைய காங்கிரஸ் அரசாங்கம், அவை போன்ற இவ்வமைப்பின் பாதுகாவலர்கள், உடந்தை யாளார்கள் மற்றும் பலனடைபவர்களால் மக்களை முட்டாளாக்கிட மேற்கொள்ளப் படுபவைகளாகும்.

கருப்புப்பணத்தை மீட்டெடுப்பது மற்றும் மீட்டெடுத்த கருப்புப்பண ரொக்கத்தை ஒவ்வொரு குடிமகனின் வங்கிக்கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் செலுத்திடுவோம் என வாக்குறுதியளிக்கும் அளவிற்குச் சென்றுகூட வாக்குறுதி தந்து பாஜக யானது அதிகாரத்தில் அமர்ந்தது. அது ஒருபோதும் நடக்காததால், கேள்வி கேட்கின்ற மக்களைக் குழப்பிட, குறிப்பாக தவிர்க்கவியலாமல் வரவிருந்த நெருக்கடி மிகுந்த உத்திரப்பிரதேச மாநில சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு ஒரு நாடகமாடுதல் என்பது பாஜகவின் தலைவர் களுக்குத் தேவைப்பட்டிருக்கின்றது.

## பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் படுதோல்வியிலிருந்து பெறப்படவேண்டிய படிப்பினைகள்

பணமதிப்புநீக்க நடவடிக்கையின் படுதோல்வி யானது ஒரு சில யதார்த்த உண்மைகளை மீண்டு மொருமுறை நம் கண்முன்னால் கொண்டு வந்துள்ளது. முதலாவதாக, இந்த முதலாளித்துவ அமைப்பினுள் கட்டுண்டவர்கள், இவ்வமைப் பிற்குச் சேவை புரிபவர்களின் நலன், இவ்வமைப்பை இயக்குபவர்களின் நலன் என்பது கருப்புப்பண மற்றும் லஞ்ச லாவண்ய இத்தகைய பிற பிறழ்தல்களின் அமைப்பை தூய்மைப் படுத்துவதாகும் என்று எதிர்பார்த்திடுவது வீண் செயலாகும். ஆளும் பூர்ஷ்வா கட்சிகளின் முழுமையான ஒரே நோக்கம், பொருளாதாரச் சீர்திருத்தம், திறமையான நிதிக்கொள்கைகள் மற்றும் பொருளாதாரக் குற்றவாளிகள் மீதான துல்லியத் தாக்குதல் என்ற பெயரில் முதலாளித் துவத்தின் தீர்க்கமுடியாத வளர்ந்துவரும் நெருக்கடியின் சுமையை மக்கள்மீது ஒட்டுமொத்த மாகச் சுமத்துவதுதானாகும். புரட்சியின் மூலம் முதலாளித்துவம் தூக்கியெறியப்படும்வரையில் இத்தகைய முறைகேடுகள், லஞ்ச லாவண்யம் மற்றும் பிற பிணிகள் தொடர்ந்து பெருகிக் கொண்டுதானிருக்கும்.

தொடர்ந்து சீரழிந்துகொண்டிருக்கும், சிதைந்து கொண்டிருக்கும் முதலாளித்துவ அமைப்பின் உயிர்வாழ்ந்திட வேண்டுமெனில், முடிந்தவரையில் அச்சீரழிவைத் தடுத்து நிறுத்தவேண்டுமெனில், வாழ்க்கையின் எரியும் பிரச்சினைகளின் மீதான, வாழ்க்கையில் அழிவை ஏற்படுத்திக்கொண்டி ருக்கும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை யெதிர்த்த ஒன்றுபட்ட அமைப்புரீதியிலான, சக்திவாய்ந்த வெகுஜன இயக்கங்களைக் கட்டுவது கட்டாயமாகும். அத்தகைய ஒரு மாபெரும் இயக்கத்தின் ஒரு எழுச்சி மற்றும் தீவிரம் மட்டுமே லஞ்ச லாவண்யம் மற்றும் கருப்புப்பணத்தினால் ஏற்படும் தொல்லைகள் பெருகி வளர்வதில் பின்னடைவை ஏற்படுத்திடக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும். இவ்வாறாக, ஒடுக்கப்படும் துன்பப்படும் பாடுபடும் மக்களுக்கு அது சில நிவாரணத்தைத் தரும் ■

# தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கையும் நீட் தேர்வும் – கருத்தரங்கம்

சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் செப்டம்பர் **26, 2017** அன்று நடைபெற்ற தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கையும் நீட் தேர்வும் என்ற கருத்தரங்கத்தை டாக்டர் எஸ் ஹெச் திலகர், அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி, தமிழ்நாடு கன்வீனர் தலைமை தாங்கி துவக்கிவைத்தார். முதல் நிகழ்ச்சியாக கருத்தரங்கத்தின் அணுகுமுறை அறிக்கையை அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி, தமிழ்நாடு கன்வீனிங் கமிட்டி உறுப்பினரான திரு எம் ஜெ வால்டேர் வாசித்தார். தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கையை கைவிட்டு பாஸ்–பெயில் அடிப்படையிலான தேர்ச்சி முறையை ஒன்றாம் வகுப்பு முதல் அறிமுகப்படுத்த வேண்டும், நீட் தேர்வைக் கைவிட வேண்டும், கல்வியைப் பொதுப்பட்டியலிலிருந்து மாநில அதிகார வரம்பிற்குள் மீண்டும் கொண்டு வரவேண்டும் ஆகிய தலைப்புக்களை விவாதப் பொருளாகச் சமர்ப்பித்தார்.




**அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் அகில இந்தியத் துணைத் தலைவர் கே உமா பேசுகிறார்**

தொடர்ந்து பேசிய அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் அகில இந்தியக் கமிட்டி உறுப்பினரும் கர்நாடக மாநிலச் செயலாளருமான திருமதி உமா அவர்கள் நீட் தேர்வை எதிர்த்துப் போராடி தோல்வியுற்று. தகுதி இருந்தும் மருத்துவக் கல்வி பயிலமுடியாமல் தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்ட தமிழ்நாட்டின் புதல்வி அனிதாவிற்கு நீதி கிடைக்க நீட்டை எதிர்த்து அணிதிரண்டுப் போராடிய தமிழக மக்களை வாழ்த்தினார். **1**ஆம் முதல் **8**ஆம் வகுப்புவரை இருக்கும் தடையில்லாத் தேர்ச்சிமுறை உண்மையில் ஏழை, எளிய மக்களுக்கு கல்வியை மறுத்து, கிராமப்புற மாணவர்களில் **5**ஆம் வகுப்பில் **28** சதவீதமும் **8**ஆம் வகுப்பில் **45** சதவீதமும் இடைநிற்றல் (டிராப் அவுட்) நடந்து **12**ஆம் வகுப்பில் **54** சதவீதம் ஆக இருக்கிறது என்ற புள்ளி விவரத்தை அவர் முன்வைத்தார். ஆக தடையில்லாத் தேர்ச்சிமுறைக் கொள்கையில் சொல்லப்பட்ட இடைநிற்றலை தடுக்கும் என்ற இலக்கும், தரமான கல்வி கிடைக்கும் என்ற நோக்கமும் நிறைவேறுவதற்குப் பதிலாக அவற்றை அதிகரித்துவிட்டது என்றார். **8**ஆம் வகுப்புவரை தடையில்லாத் தேர்ச்சி, ஆனால் **12**ஆம் வகுப்பிற்குப் பின் நீட் போன்ற தேர்வுகள் என்றால் என்ன ஒரு வினோத முரண்பாடு என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

கருந்தரங்கில், பாரதியார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர், போராசிரியர் இளங்கோ பேசுகையில் பள்ளிகளில் கல்வித்தரத்தை உறுதிசெய்ய பாஸ்–பெயில் முறையை கண்டிப்பாக பின்பற்றவேண்டும். ஆனால் அதேவேளையில் அத்தகைய மாணவர்களுக்கு சிறப்புக் கவனம் அளித்து தேர்ச்சிபெறச் செய்வதே ஆசிரியர்களின் கடமை எனக் குறிப்பிட்டார்.

சென்னை பல்கலைக்கழக அரசியல், அறிவியல் மற்றும் பொது நிர்வாகத்துறை பேராசிரியர் ராமு மணிவண்ணன் உரையாற்றுகையில், தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கையை கைவிடவேண்டும் எனக்கோரும்போது சில ஊரகப் பின்தங்கிய பள்ளிகளின் யதார்த்த சூழ்நிலைகளைக் கவனத்தில் கொள்வதும் அவசியம் ஆனால் மாணவர்கள் கல்வி பெறுவதை உறுதி செய்ய மாணவர்களையும் ஆசிரியர்களையும் தொடர்ந்து மதிப்பீடு செய்யும் முறையே தேவை எனக் கூறினார். நீட் தேர்வைப் பொருத்தவரை மாநில சுயாட்சி உரிமைகளைத் தட்டிப்பறித்து மத்திய அரசாங்கம் அதிகாரத்தை தன் கையில் குவித்துக்கொள்ளும் அரசியல் நோக்கம் இருப்பது புலப்படுகிறது என்றும் இந்தக் கோணத்திலும் அதனைப் பார்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சென்னை உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் திருப்பதிசாமி பேசுகையில் தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கையினால் ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை தேர்ச்சி பெறும் ஒரு மாணவனை ஒன்பதாம் வகுப்பிலும் கட்டாயமாக தேர்ச்சி பெறவைக்க ஆசிரியர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதனால் அடிப்படை கற்றல்கூட இல்லாத ஒரு மாணவன் பத்தாம் வகுப்பில் பொதுத்தேர்வை எழுதும் சூழ்நிலையை முதல் முறையாகச் சந்திக்கிறான். அவனுக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பத்தாம் வகுப்பில் தேர்ச்சிப் பெறவைக்கப் படாதபாடுபடுகின்றனர். சில மாணவர்கள் தேர்வு பயத்தினால் பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்திவிடுகின்றனர். இப்படிப்பட்ட தடையில்லாத் தேர்ச்சிக்கொள்கையை நீக்கி பாஸ்–பெயில் முறையை மீண்டும் ஒன்றாம் வகுப்பிலிருந்து அமல்படுத்தி கல்வியின் தரத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கைக எடுக்கவேண்டும் என்றார்.

இறுதியாக டாக்டர் ராஜகோபால், அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் தமிழ்நாடு மாநில கன்வினிங் கமிட்டி உறுப்பினர், கருத்தரங்கத்தின் பல்வேறு கருத்துக்களைத் தொகுத்துக் கூறினார்.

நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் சமூக சிந்தனை கொண்ட கல்வி ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டனர் ■

## புதுதில்லியில் நவம்பர் 9,10,11ல் நடைபெறவிருக்கின்ற போராட்டத்தை விளக்கி கருத்தரங்கம்



**செப்டம்பர் 19, 2017 அன்று தேனியில் அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பாக நடைபெற்ற கருத்தரங்கத்தில் தோழர் பாண்டியன், அகில இந்திய யுடியுசி, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் உரையாற்றுகிறார்**

## நீட் தேர்வுக்கு எதிராக இடதுசாரி தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்




**அக்டோபர் 5, 2017 அன்று சென்னை விருந்தினர் மாளிகை அருகில் அகில இந்திய யுடியுசி, ஏஐடியுசி, சிஐடியு மற்றும் ஏஐசிசிடியு இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டம்**

## மாபெரும் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா

# பொதுக்கூட்டம்

**சாஹித் மினார் மைதானம், கொல்கத்தா**

**17 நவம்பர், 2017, மதியம் 2 மணி**

**சிறப்புரை :** தோழர் **பிரவாஸ் கோஷ்**

**தலைமை :** தோழர் மணிக் முகர்ஜி

**உரையாற்றுவோர் :** தோழர் சத்யவான் (ஹரியாணா)

தோழர் ராதாகிருஷ்ணா (கர்நாடகா)



# மாபெரும் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா . . .

3ம் பக்கத் தொடர்ச்சி

கண்ணால் கண்டோம், காதாரக் கேட்டோம், குறிப்புகளோடு வந்தோம். வந்து நாங்கள் சொல்வதை அப்படியெல்லாம் இருக்காது என்று நினைப்பவர்கள் சொன்னால் அதைப் பற்றி கவலையில்லை" என்று கூறினார் (நான் கண்ட ரஷ்யா, 1952).

கம்யூனிஸ்டுகள் யுத்த விரும்பிகள், அவர்களுக்கு கலாரசனை எல்லாம் குறைவு என்று ஒரு தவறான கருத்து பரப்பப்பட்டது. ஆனால், "...சோவியத் சமுதாயத்திலே மிகுந்த கௌரவம் அளிக்கப்படும் பிரஜை, கலைஞன். யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் வாழ்வில் பூர்ணமாகக் கலந்து கொள்ளுபவன்; ஏதோ அழகுக்கு உப்பரிகை கட்டி அதன் நிலா முற்றத்திலே, சந்திரகாந்தக் கல்மண்டபத்திலே கிடந்து கனவு காண்பவன் அல்லன் அவன். உருக்கு, சிமெண்டு கட்டிட அடித்தளத்திலே, தொழிற்சாலைகளிலே பாரா உஷார் அலங்கத்திலே (அதாவது காவலாளியாக) அவன் சஞ்சரிக்கிறான். அவன் அந்தச் சமூகத்தின் பிறவி; ஆனால் அதனுள் மூழ்கிக் கிடக்கவில்லை. ...அவனது பேச்சுக்கு ஊக்கம் அங்கே உண்டு" என்கிறார் புதுமைப்பித்தன் (ஸ்டாலினுக்குத் தெரியும் 1941). சோவியத் மக்களுக்குச் சுயமாகச் சிந்தனை செய்வதற்குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகள் நீர்த்துளியாக்கும் வெட்டிக் கனவுகளை அவர்கள் விரும்புவதில்லை. வாழ்வை அவர்கள் பார்க்கும் தினுசே வேறு. சுயமாக காரியம் நடத்திக்கொள்ள ரஷ்யருக்குத் தெம்பு கொடுப்பது இதுதான் எனவும் அவர் பாராட்டுகிறார்.

"20ம் நூற்றாண்டின் மாபெரும் நிகழ்வான ரஷ்யப் புரட்சி நவம்பர் 1917ல் நடந்து முடிந்த போது பிரம்மாண்டமான பொறுப்பு லெனின் மீது விழுந்திருந்தது. பழையதைத் தகர்க்கவேண்டும், புதியது ஒன்றை நிர்மாணிக்கவேண்டும். தகர்த்தெறிவது என்றாவது ஒருநாள் நிகழவேண்டியது. ஆனால் புதிய உலகை அமைப்பது பன்மடங்கு பெரிய பணி, நீடித்த காலம் தளராத உழைப்பை வாங்கும் பணி. இதை லெனின் ஏற்று முன்செல்லும் போது மாக்சிம் கார்க்கி போன்ற யதார்த்தவாதிகள் கூடச் சிறிது தயக்கமுற்றார்கள்" என லெனின் ஆற்றிய பணியை புகழ்ந்தார் அசோகமித்திரன் (மாக்சிம் கார்க்கி நூற்றாண்டுக் கருத்தரங்கம், சென்னை இலக்கியச் சங்கம், சென்னை, 1968).

கம்யூனிஸ்டுகள் நாட்டில் இரும்புத்திரை நிலவும். அங்கு சுதந்திரம் கிடையாது. கட்டுப்பாடுகள் அதிகம் என்ற மற்றுமொரு பொய்ப் பிரச்சாரமும் நடக்கிறது. அந்நாட்டை நேரில் கண்டுவந்த கலைவாணர் என்ன கூறுகிறார்? "(ரஷ்ய) மக்கள் அவ்வளவு சந்தோஷம் கொள்ள வேண்டிய காரணம் என்னவென்றால் கட்டுப்பாடு அங்கில்லை. மக்கள் இஷ்டம்போல் வாழ்கின்றனர். கட்டுப்பாடோடு அதிகாரத்தோடு அவற்றின்கீழ் வைத்திருந்தால் இன்றைக்கு 35 வருடங்களுக்கு முன்பே சுதந்திரம் பெற்ற அவர்களை இத்தனைகாலம் அடக்கி வைத்திருந்தால் மக்கள் சும்மா இருக்க மாட்டார்கள். ஜனங்களெல்லாம் திரும்பிவிடுவார்கள். அதற்குரியவர்களைத் தண்டித்து விடுவார்கள்" (நான் கண்ட ரஷ்யா, 1952).

அனைத்து சொத்துக்களும் பொதுவுடமை என ஆன பிறகு அச் சமுதாயத்தில் திருட்டு, பொய், புரட்டு, ஏமாற்று என்பதற்கெல்லாம் இடமேது! இந்தச் சிந்தனையே அவர்களுக்கு உதிப்பதில்லை. ரஷ்யா சென்ற கவி தாகூர், ஒரு கல்வித் தரத்தை பரிசோதிக்க, ஆரம்பப் பள்ளி மாணவனிடம் "ஒரு பழத்தை 5 ரூபிளுக்கு வாங்கி 6 ரூபிளுக்கு விற்றால் என்ன கிடைக்கும்" எனக் கேட்க, அம்மாணவன் "தண்டனை கிடைக்கும்" என்றானாம். கலைவாணரும் ஒரு தகவலைச் சொல்கிறார்: "மாஸ்கோவைச் சுற்றி சுரங்க இரயில்பாதை ஒன்று போட்டிருக்கிறார்கள். எல்லோரும் ரயிலிலே வந்து பின்பு பேசாமல் இறங்கி போய்விடுவார்கள். பயணச்சீட்டும் கேட்பதில்லை. பரிசோதனையும் கிடையாது. என்ன இது, ஒருவரும் பயணச்சீட்டு கேட்கவில்லையே என்று கேட்டேன். நாங்கள் என்ன எங்கள் தேசத்தை ஏமாற்றுவோம் என்றா நினைக்கிறீர்கள்? கொஞ்சம் கூட நினைக்கவேண்டாம். இது எங்கள் அரசாங்கம். ...அரசாங்கத்தை ஏமாற்றுவோமா? அப்படியானால் உங்கள் ஊரிலே அவ்வாறு நடக்குமா என்று கேட்டார். நடக்குமா என்று கேட்டால் நாங்கள் என்ன சொல்ல? முகத்தை திருப்பி வைத்துக் கொண்டேன். வேறு வழியில்லை".

இப்படிப் பலரும் போற்றி வியந்த சோசலிச சமுதாயம் 1991ல் திருத்தல்வாதிகளாலும் முதலாளித்துவவாதிகளாலும் வீழ்த்தப்பட்டு விட்டது. இது வேதனையைத் தந்த போதிலும் எமது கட்சித் தோழர்கள் எதிர்ப்பாராத அதிர்ச்சியை அடைந்துவிடவில்லை. ஏனெனில், மாபெரும் தலைவர்களான லெனினும், ஸ்டாலினும், மாசேதுங்கும், எமது கட்சியின் ஆசானும் வழிகாட்டியும் இக்காலகட்டத்தின் மாபெரும் மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களும் பின்வரும் படிப்பினையை நமக்கு வழங்கியிருக்கிறார்கள். வர்க்கப் பிரிவினை கொண்ட முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து வர்க்கமற்ற கம்யூனிச சமுதாயத்தை நோக்கி மனித நாகரீகம் வளரும் போக்கில் சோசலிசமென்பது ஒரு இடைக் காலமே. இந்த இடைப்பட்ட காலத்தில் புரட்சியின் மூலம் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்திற்கு வருவதும், எதிர்ப்புரட்சி நடத்தி முதலாளித்துவ வர்க்கம் மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கும். எதிர்ப்புரட்சியிலிலிருந்தும் உரிய படங்களை எடுத்துக் கொண்டு, தனது விழிப்புணர்வை அதிகரித்துக் கொண்டு இறுதியில் பாட்டாளி வர்க்கம் தனது அதிகாரத்தை நிலைநாட்டும். அனைத்து உற்பத்திசாதனங்களும் முழுமையாக அரசுடைமை ஆக்கப்பட்டு மக்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்தி உபரியாகிவிடும்பொழுது, வர்க்கப் பிரிவினை மறையும்; அரசு என்ற அடக்குமுறை அமைப்பும் உலர்ந்து உதிரும். அங்கு, பரஸ்பர நட்பின் அடிப்படையிலான அனைத்து மக்களின் ஒருங்கிணைந்த நிர்வாகம் நடைபெறும்.

நவம்பர் புரட்சியின் படிப்பினைகளை மக்களிடம் கொண்டு செல்லும் நிகழ்ச்சிகள் நவம்பர் மாத இறுதிவரை நடத்த கட்சி திட்டமிட்டுள்ளது. இறுதி நிகழ்வாக, நவம்பர் 17 அன்று கொல்கத்தாவில் மாபெரும் அணிவகுப்பும் பொதுக் கூட்டமும் நடைபெறும். நவம்பர் 18 அன்று கலாச்சார நிகழ்ச்சியும் நடைபெறும் ■

# வட கொரியா மீதான போர் அச்சுறுத்தல் . . .

5ம் பக்கத் தொடர்ச்சி

அணு ஆயுதங்கள் உற்பத்தியைக் கைவிட நிர்ப்பந்திக்கும் நயவஞ்சகக் கொள்கைக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். இந்த அழுத்தத்திற்கு அடிபணியும் எந்த ஒரு நாட்டையும் ராணுவத் தாக்குதல் மூலம் வேட்டையாடி, அடக்கி ஆள்வது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு எளிதாகி விடுகிறது. உக்ரைன், லிபியா, ஈராக், சமீபத்தில் ஈரான் ஆகியவை இதற்கு உதாரணங்களாகும்.

இத்தகைய அனைத்து சம்பவங்கள், நேரடி அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் என்றாவது ஒரு நாள் தங்களது மிருகபல ராணுவத்தைக் கொண்டு தங்களைத் தாக்கக்கூடும் என்பதை வடகொரியா உணர்ந்தது. தாக்கப்பட்டால் தங்களைப் பாதுகாப்பதற்கு எந்த ஒரு நாடும் முன்வராது, ஏனென்றால் அனைத்து நாடுகளுமே பெண்டகன் ஆட்சியாளர்களுக்கு அடிபணிந்துவிட்டன.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் போர் அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்கும் அமைதியை உத்திரவாதப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து ராஜாங்க முயற்சிகளையும் மேற்கொள்ள வடகொரியா ஒருபோதும் தயங்கியதில்லை. ஆனால் 1953லிருந்து கடந்த 64 ஆண்டுகளாக டிபிஆர்கேவுடன் பேச்சுவார்த்தைக்கு அமர்ந்து போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமெரிக்கா தொடர்ந்து மறுத்து வருகிறது. இத்தகைய சூழ்நிலைமையில் வடகொரியாவுக்கு இரண்டே வழிகள்தான் உள்ளன, ஒன்று அவமானகரமாக சரணாகதியடைவது அல்லது அச்சுறுத்தலையும் மிரட்டலையும் துணிச்சலோடு எதிர்கொண்டு ஏகாதிபத்திய தாக்குதல்களுக்கு துணிச்சலான சரியான பதிலடி கொடுத்து ஒரு உதாரணமாகத் திகழ்வது.

வடகொரியா மிகச்சரியாக நியாயமாக இரண்டாவது வழியைத் தேர்ந்தெடுத்துள்ளது. எனவே அமெரிக்காவின் தொடர் அச்சுறுத்தலை முறியடிக்க தன்னை சவாலுக்கு ஏற்றவாறு 'சமநிலைப்படுத்தும்' வகையில் அணு ஆயுத வல்லமை உள்ளிட்ட ராணுவ பலத்தை வளர்க்கத் தொடங்கியது.

வேறு யாரைக் காட்டிலும் வடகொரியா அமைதியை அதிகம் விரும்புகிறது. ... அமெரிக்காவும் அதன் பொம்மை சக்திகளும் கொரிய தீபகற்பத்திலும் இப்பிராந்தியத்திலும் அமைதியை சீர்குலைத்து நிலைத்தன்மையை சீரழிக்க தொடர்ந்து அச்சுறுத்தியும் மிரட்டியும் வருகின்றன. அவர்கள் கோபத்தைத் தூண்டி தாக்குதல் நடத்தும் போர் வெறியர்கள். "அமெரிக்க வல்லாதிக்கத்தின் ஒருதலைபட்சமான செயல்பாடுகளை முறியடிக்க அனைத்து வழிகளிலும் நியாயமான காரணத்திற்காக அணு ஆயுதங்களை டிபிஆர்கே ராணுவமும் மக்களும் வளர்த்தெடுப்பார்கள், அதன் மூலம் நாட்டையும் இறையாண்மையையும், தேசத்தின் இருத்தல் உரிமையையும், கொரியத் தீபகற்பம் மற்றும் இப்பிராந்தியத்தின் அமைதியையும் பாதுகாப்பையும் மிகவும் நம்பிக்கைக்குரிய வகையில் பாதுகாப்பார்கள்." என்று டிபிஆர்கேவின் தற்போதைய அதிபர் கிம்–ஜங்–வுன் உறுதிபடத் தெரிவித்துள்ளார். வடகொரியாவுடனான உறவை மேம்படுத்துவேன் என்று உறுதிமொழி கொடுத்துதான் தென்கொரிய அதிபர் மூன் ஜே–இன் சமீபத்திய தேர்தலில் வெற்றிபெற்று அதிபரானார் என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். ஆனால் மூனின் நடவடிக்கையை ஏற்க மறுத்த அமெரிக்க அதிபர் டிரம்ப், இந்த பேச்சுவார்த்தை நடவடிக்கை கொள்கையைக் கைவிடுமாறு நிர்ப்பந்தித்தார். இங்கே அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் அத்துமீறுகிறது. வடகொரியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையை மட்டுமே செய்கிறது.

## உலகளாவிய ஏகாதிபத்திய–எதிர்ப்புப் போராட்டத்தை வளர்த்தெடுப்பது அவசியம்

ஆக, வடகொரியா தனது பாதுகாப்பை மட்டும் கட்டியெழுப்பவில்லை. அதே சமயம் அதன் போக்கில் மனிதகுலத்தின் மீதான ஏகாதிபத்தியத் தாக்குதலுக்கு எதிராக சரியாக சிந்திக்கும் போர்–எதிர்ப்பு எண்ணம்கொண்ட மக்களின் பாதுகாப்பையும் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கின்றது. தென்கொரியாவின் உழைக்கும் மக்கள் வடகொரியாவுடன் சகோதரத்துவத்தையும் ஒத்துழைப்பையும் அதிகரித்துவருவதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சில நாட்களுக்கு முன்பு நவீன ஏவுகணைத் தாக்குதல் திட்டமான 'உயர் பகுதி பாதுகாப்பு மையத்தை' தென்கொரிய மண்ணில் அமெரிக்கா நிறுவுவதை தென் கொரிய மக்கள் கோபாவேசத்தோடு எதிர்த்துள்ளனர். தென்கொரிய மக்களின் ஆசையையும் பெண்டகன் ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளப்போவதில்லை.

எனவே அனைத்து ஜனநாயக–எண்ணம் கொண்ட சரியாக சிந்திக்கும் மக்கள் யாவரும் ஒன்றிணைந்து எவ்விதத் தயக்கமுமில்லாமல் வடகொரியாவுக்கு ஆதரவளிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். ஒவ்வொரு நாட்டின் உழைக்கும் மக்களும் தங்களது தரத்தை மேம்படுத்தி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, சக்திவாய்ந்த உக்கிரமான அமைதி இயக்கங்களை கட்டியெழுப்பி அத்தகைய இயக்கங்களை சர்வதேச அளவில் ஒருங்கிணைத்து அவரவர் நாட்டு அரசாங்கங்கள் அமெரிக்காவின் இந்த போர் அச்சுறுத்தத்தல்களையும் வடகொரியாவின் மீதான பொருளாதாரத்தடைகளையும் எதிர்க்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் உலக மக்களின் கருத்து உறுதிப்பாடு ஏகாதிபத்திய முதலைகளை நிர்ப்பந்திக்கும், இந்த நாசகார நயவஞ்சக சதி முறியடிக்கப்படும். ஒன்றுபட்டு உறுதியாக முழங்குவோம், "அமெரிக்க ஏகாதிபத்தியமே, வடகொரியாமீது கைவைக்காதே" ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

## விவசாயிகளின் எரியும் பிரச்சினைகளையொட்டி

# அகில இந்திய விவசாயிகள் விடுதலைப் பயணம்

இந்திய நாடெங்கிலும் இதுவரை கண்டிராத அளவில் விவசாயிகளின் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அப்போராட்டங்கள் தங்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கொடுக்க வேண்டும், வறட்சி நிவாரணம் வேண்டும், அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளை மத்திய–மாநில அரசாங்கங்களிடம் வலியுறுத்தின. மத்திய பிரதேசத்தின் மான்சோர் மாவட்டத்தில் இதே போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்தில் 5 விவசாயிகள் போலீசாரால் சுட்டுக்கொள்ளப்பட்டனர். டில்லியிலுள்ள ஜந்தர் மந்தர் எனுமிடத்தில் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் திரு அய்யாகண்ணு அவர்கள் தலைமையில் தொடர் போராட்டங்கள் மாதக்கணக்கில் நடைபெற்று வருகின்றன. இப்போராட்டம் நாட்டின் அனைத்து பகுதி விவசாயிகளையும் ஈர்த்தது. பல்வேறு விவசாய சங்கங்கள் ஜந்தர் மந்தர் சென்று தங்களது ஆதரவைத் தெரிவித்தன. இப்போராட்டத்தின் துவக்கத்திலேயே எமது அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கத் (AIKKMS)தின் தலைவர் தோழர் சத்தியவான் அவர்கள் அங்கு சென்று தமது அமைப்பின் ஆதரவினை தெரிவித்தார்.

இதன் போக்கில் பல விவசாய சங்கங்கள் பல்வேறு கட்ட விவாதங்களின் மூலம் ஒன்றுகூடிப் பேசி அனைத்து சங்கங்களும் ஒற்றுமையுடன் போராட வேண்டும் எனும் கருத்தொற்றுமை என்பது உருவாகியது. அதனடிப்படையில் அகில இந்திய அளவில் 150க்கும் மேற்பட்ட விவசாய சங்கங்களைக் கொண்ட அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்புக் கமிட்டி (AIKSCC) என்பது ஜூன் 16, 2017 அன்று துவக்கப்பட்டது. இந்தக் கமிட்டியில் எமது கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் விவசாய சங்கமான அகில இந்திய விவசாயிகள்–விவசாய தொழிலாளர்கள் சங்கமும் ஓர் அங்கமாகும். அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்புக் கமிட்டி ஓர் பரந்து பட்ட மேடையாகும். இது, விவசாய சங்கங்கள், விவசாய தொழிலாளர் சங்கங்கள், மீனவ சங்கங்கள், கோழிப் பண்ணை, பால் பண்ணை சங்கங்கள், தோட்டக்கலை சங்கங்கள் ஆகியவைகளைக் கொண்ட அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் பொதுவான நோக்கம் விவசாயிகள் கௌரவமாக வாழ்வதற்கும் வாழ்வாதாரத்தை பெருக்குவதற்குமாகும். இதன் உடனடியான நோக்கம் இந்திய நாடு முழுவதும் விவசாயிகளின் போராட்டங்களை ஒருங்கிணைத்து போராடுவதாகும். கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட இவ்வமைப்பு முடிவெடுத்தது.

1) விவசாய விளைபொருட்களுக்கு உற்பத்தி விலையுடன் 50% சேர்த்து விலை கொடுக்கவேண்டும்

2) விவசாயிகளின் கடன்கள் அனைத்தையும் ரத்து செய்யவேண்டும்

இவ்விரண்டு கோரிக்கைகளை முன்வைத்து ஜூலை 1லிருந்து 18ந் தேதிவரை முதல்கட்ட விவசாயிகள் யாத்திரையை விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்ட மத்தியப் பிரதேசத்தின் மான்சோரிலிருந்து டெல்லிவரை இக்கமிட்டி நடத்தியது. அந்த யாத்திரையின்போது பல்வேறு இடங்களில் அக்கமிட்டியின் நோக்கங்கள் குறித்து விவசாயிகளிடையே பிரச்சாரம் செய்தது. இந்த யாத்திரை விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் நாடு முழுவதும் இதுபோன்ற யாத்திரையை நடத்தவேண்டும் என இக்கமிட்டி முடிவெடுத்தது. நாடு முழுவதும் மேலும் 5 வழித்தடங்களில் விவசாயிகள் யாத்திரை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த யாத்திரையை செப்டம்பர் 2017 முதல் நவம்பர் 10, 2017 வரை நடத்திட முடிவு செய்யப்பட்டது.



சென்னையில் துவக்க நிகழ்ச்சியின்போது செய்தியாளர் சந்திப்பில் ஏஐகேகேஎம்எஸ்ஸின், தமிழ்நாடு பொறுப்பாளர் தோழர் ரெங்கசாமி பேசுகிறார்

இதன் ஒருபகுதியாக தென் மாநிலங்களில் ஆந்திராவில் துவங்கி தமிழ்நாடு, கேரளா வழியாக கர்நாடகாவில் விவசாயிகள் யாத்திரை முடிந்தது. தமிழ்நாட்டில் இந்த யாத்திரை செப்டம்பர் 19, 20 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

சென்னையில் துவங்கிய இந்த யாத்திரை பெரம்பலூர், தஞ்சாவூர், மதுரை, வேடசந்தூர் வழியாக ஈரோட்டில் முடிவடைந்தது. 1978ல் வேடசந்தூரில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் பலியானவர்களின் நினைவிடத்திற்கு சென்று மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த யாத்திரையானது இக்கமிட்டியின் அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்பாளர் வி எம் சிங் அவர்கள் தலைமையிலும் தமிழ்நாட்டின் ஒருங்கிணைப்பாளர் கே பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. இதுபோன்ற யாத்திரை கேரளா கர்நாடகா ஆந்திரா உள்ளிட்ட பெரும்பாலான வட மாநிலங்களிலும் நடைபெற்றது. அதில் எமது விவசாயிகள் சங்க அமைப்பின் தலைவர்களும் கலந்துகொண்டு பேசினர்.

எமது அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் தோழர் சத்தியவான் அவர்கள், தமிழ்நாட்டிலும் நமது சங்கம் இந்த யாத்திரையில் கலந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் பேரில் எமது விவசாய சங்கத்தின் சார்பாக அதன் தமிழ்நாடு பொறுப்பாளர் தோழர் ஆ ரெங்கசாமி கலந்து கொண்டார். அவரோடு இவ்வமைப்பைச் சார்ந்த தோழர் சாய்குமாரும் கலந்துகொண்டார். மாவட்ட யாத்திரை கூட்டங்களில் எமது விவசாய சங்க தோழர்களும் கலந்துகொண்டனர். இந்த யாத்திரை கூட்டங்களில் எமது வெளியீடான ‘விவசாயிகளின் போராட்டங்களும் அதன் படிப்பினைகளும்’ என்ற புத்தகம் வெகுஜனங்கள் மத்தியில் விற்கப்பட்டது.

இந்த யாத்திரை கூட்டத்தில் ஏஐகேகேஎம்எஸ்ஸின் தமிழ்நாடு பொறுப்பாளர் தோழர் ரெங்கசாமி பேசுகையில், “விவசாயிகளின் குறைந்தபட்ச கோரிக்கையின் அடிப்படையில் ஒற்றுமையாக போராடவேண்டிய தன் அவசியம் குறித்து பேசினார். இந்திய முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய அரசாங்கங்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின்பு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பெருக்குவதற்கான திட்டத்தை கைவிட்டு விட்டன. தொழிற்சாலை முதலாளிகளுக்காகவே அனைத்துத் திட்டங்களும் போடப்பட்டன. 1950களில் விவசாய விளைபொருட்களும் தொழிற்சாலை பொருட்களும் சமவிலை மதிப்பில் இருந்தன. ஆனால் இன்று விவசாய விளைபொருட்களுக்கும் தொழிற்சாலை பொருட்களுக்கும் விலை மதிப்பில் அதிக இடைவெளி ஏற்பட்டுள்ளது. அதனால் விவசாயிகள் விளைபொருட்களை கட்டுபடியான விலைக்கு விற்கமுடியவில்லை. மத்திய, மாநில அரசாங்கங் களும் கட்டுபடியான விலையில் கொள்முதல் செய்யவில்லை. அதனால் விவசாயிகள் கடுமையாக பாதிப்படைந்தனர். குறிப்பாக முன்னாள் சோவியத் யூனியன் தலைமையிலான சோசலிச முகாம் வீழ்ந்தபின்பும் உலகமய கொள்கையின் விளைவாகவும் விவசாயிகள் மோசமாக பாதிக்ககப்பட்டு லட்சக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டனர். தமிழ்நாட்டிலும் 400க்கும் மேற்பட்ட விவசாயிகள கடந்த மாதங்களில் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். விவசாயிகளின் குறைந்தபட்ச வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்யவேண்டுமாலும்கூட போராடவேண்டும். விவசாய சங்கங்கள் அனைத்தும் கட்சிப்பாகுபாடின்றி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு தொடர்ந்து போராடுவதே இன்றைய தேவையாகும். எனவே அனைத்து சங்கங்களும் ஒன்றுபட்டு போராடவேண்டுமென அவர் அறைகூவல் விடுத்தார்.



மதுரையில் விவசாயிகள் விடுதலை பயண கூட்டத்தில் ஏஐகேகேஎம்எஸ்ஸின் தமிழ்நாடு பொறுப்பாளர், தோழர் ரெங்கசாமி பேசுகிறார்



ஈரோடு கூட்டத்தில் விவசாயிகள் விடுதலை பயணத்தின்போது கலந்தகொண்ட விவசாயிகள்

இந்த அகில இந்திய யாத்திரையின் முடிவில் நவம்பர் 20, 2017ல் அனைத்து மாநிலங்களிலுமுள்ள விவசாய சங்கங்களும் டெல்லி ராம்லீலா மைதானத்தில் ஒன்றுகூடி விவசாயிகளின் பிரச்சினைகளை மையமாகவைத்து ‘பாராளுமன்றம் முன்பாக கூட்டம்’ நடத்த இக்கமிட்டி ஏற்பாடு செய்துள்ளது. நவம்பர் 20 முதல் 22 வரை ஜந்தர் மந்தரில் இக்கமிட்டியின் சார்பாக அனைத்து விவசாய சங்கங்களும் இந்த போராட்டத்தில் கலந்துகொள்கின்றன. இந்தப் போராட்டங்களில் வட மாநிலங்களிலிருந்து 1 லட்சத்திற்கும் மேலான விவசாயிகளை ஒன்று திரட்டி போராடுவதென இக்கமிட்டி முடிவெடுத்துள்ளது. இதில் கலந்து கொள்ளும்படி அனைத்து மாநில விவசாய சங்கங்களுக்கும் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. கோரிக்கைகளை வென்றெடுக்க அனைத்து விவசாய சங்கங்களும் டெல்லியை நோக்கி படையெடுக்கத் தயாராகி வருகின்றன. இப்போராட்டத்தில் முழுவீச்சில் கலந்து கொள்ள எமது அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது ■

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**